பொன்னி

PONNI • 25-3-52 • ௪ அணா





'கண்ணிழந்தாளிடம் கனிவு
— அவள் கையணைப்பில் உளமகிழ்வு'

— என் தங்கையில் மாதுரியும் இ. வி. சரோஜாவும்



எந்தக் கோட்டையை
பிடிக்க இந்த
யோசனையோ ?

— குமாரியில் எம். ஜி. ஆர்.

பரிசு பெறுவீர்!

வறுமை தாண்டவமாடும் இக்காலில் குழந்தையை இன்பப் பொருளாக யார் கருதமுடியும்? குடும்பத்தின் தொல்லை பிள்ளையே என்று கருதுகிற 'முற்போக்கு' வாதிகள் பலர் உண்டு. குடும்பக்கட்டுப்பாடு அவசியமென்று கருதுகிறவர்கள் கூடக் குழந்தை இன்பத்தை மறுப்பதில்லை. எத்தனையோ தொல்லைகளின் மத்தியிலும் குழந்தை அன்புவடிவம் என்பதைத் தமிழர்கள் மறக்கவில்லை. எங்களுக்குக் கிடைத்திருக்கும் தலைப்புகளை எழுதியிருக்கும் எண்ணற்றவர்கள் (ஆணும் பெண்ணும்) 'பிள்ளைப் பேறு இன்பப் பேறு' என்று புரிந்திருக்கிறார்கள். பரிசு முடிவு விபரங்களை வேறு பக்கத்தில் காணுங்கள்.

தோழர் பி. ரங்கநாதன் அவர்களின் புகைப்படம் இந்த இதழ் மேலட்டையில் மிளிர்கிறது. 'உணவு இல்லை—உயிர் இல்லை' என்ற பேச்சு பெரும் பேச்சாய்ப் பரவிவரும் காலம் இது. வானின்று வழங்கும் நீரைமட்டும் மாந்தர்கள் நம்பியிருந்து விடவில்லை. மண்தரும் நீரை மண்தரும் நீரையும் தம் முயற்சியால் பயன்படுத்தினர். படத்தில் காணும் கவலை ஏற்றம் (கபிலை ஏற்றம்) எத்தனையோ பேர்களின் பசிக் கவலையைப் போக்கமுடியும். 'ஏற்றப் பாட்டு' தமிழகத்தில் நல்ல நாட்டுப்பாட்டு. நிழற்படம் காட்டும் ஏற்றம் உங்கள் கற்பனையலைகளை எழுப்பவில்லையா? பாட்டிசைப்போம் வாரீர்! தலைப்புகளை 5-4-52க்குள் கிடைக்கச் செய்யுங்கள். உங்கள் தலைப்பு ஏன் சிறந்த தலைப்பாயிருக்கக் கூடாது! ரூ. 5 பரிசு உங்களுக்குத்தான். உடனே எழுதுங்கள்

பொன்னி

பொருளடக்கம்

மலர் 6	மார்ச் 25, 1952	இதழ் 4

திருவள்ளுவர் ஆண்டு 1983
பங்குனித்திங்கள் 12-ம் நாள்

*

பொன்னி சந்தா விவரம்: உள்நாடு, இலங்கை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6—0—0, ஆறுமாதம் ரூ 3—0—0. வெளிநாடு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6-12-0; ஆறுமாதம் ரூ. 3-6-0. இலங்கைக்கு வி.பி.பி. உண்டு.

புதுமைப்பித்தன் சிறுகதைப் பரிசு



பரிசு ரூ. 250

*

'பொன்னி' அறிவிக்கும்

முதல் சிறுகதைப் போட்டி

முதற் பரிசு ரூ. 125
இரண்டாவது பரிசு ரூ. 75
மூன்றாவது பரிசு ரூ. 50

தீர்ப்புக் குழுவினர்:

அறிஞர் அப்பாத்துரை
திரு. விந்தன்
,, அகிலன்
,, டி. கே. சீனிவாசன்
,, முருகுசுப்பிரமணியன்

1. *1952 ஜூன் 30-ம்* தேதிக்குள் வரும் சிறுகதைகளே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.
2. சிறுகதைகள் இதுவரையில் வெளிவராததாகவும் மொழிபெயர்ப்பாகவோ, தழுவலாகவோ இல்லாமல் சொந்தமாய் எழுதியதாகவும் இருக்கவேண்டும். கதைகளை அனுப்பும்போது மேலுறையில் '*சிறுகதைப் போட்டிக்கு*' என்று குறிப்பிடவேண்டும்.
3. மேற்குறிப்பிட்ட ஐந்துபேர்கொண்ட தீர்ப்புக் குழுவினர் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுப்பார்கள். அவர்களில் பெரும்பாலோருடைய தீர்ப்பே முடிவானது.
4. பரிசுபெறும் சிறுகதைகளைப் 'பொன்னி'யில் வெளியிடும் உரிமை அலுவலகத்திற்கு உண்டு. வெளியிடத்தக்கதெனத் தேர்ந்தெடுக்கப்படும் மற்ற சிறுகதைகளுக்கு ஆசிரியர் கருத்துப்படி அன்பளிப்பு வழங்கப்படும்.
5. போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகள் 'பொன்னி'யில் 6 பக்கத்திற்குக் குறையாமலும், 16 பக்கத்திற்கு மேற்படாமலும் வரக்கூடியவையாக இருக்கவேண்டும். கதைகளைத் தாளின் ஒரு பக்கம் மட்டும் தெளிவான கையெழுத்தில் எழுதியனுப்ப வேண்டும்.
6. எந்தச் சிறுகதையும் பரிசுபெறத் தக்கதல்ல என்று தீர்ப்புக் குழுவினர் கருதினால், வந்தவற்றுள் சிறந்த கதைகளுக்கு ஆசிரியர் விருப்பப்படி பரிசுகள் அளிக்கப்படும்.
7. இப் போட்டிபற்றி எழும் எல்லா ஐயப்பாடுகளிலும் ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. விதிகளை மாற்றவும் திருத்தவும் அவருக்கு உரிமையுண்டு.
8. இப்போட்டிக்குக் கதைகளை அனுப்புபவர்கள், அக்கதைகளுடன் போதிய அஞ்சல்தலை அனுப்பினால் மட்டுமே கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்ப முடியும்.
9. போட்டிக்கு ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட கதைகள் அனுப்பலாம். ஆனால் யாரும் ஒரு பரிசுக்குமேல் பெறமுடியாது.

புதுக் கவர்னர்

சென்னையில் தேர்தலுக்குப் பிறகு விசித்திர நிலை ஏற்பட்டிருக்கிறது, மந்திரிசபைமீது நம்பிக்கையில்லை என்ற முடிவையே தேர்நல் முடிவுகள் விளக்குகின்றன. இந்நிலையில் கெட்டிக்காரர் பவநகர் மஹாராஜா நல்ல பெயரோடு கவர்னர் வேலையை விட்டுவிட்டார். அந்த இடத்திற்கு யார் யாரையோ அழைத்தார்கள். சங்கடமான வேலையென்று பலர் ஒதுக்கிவிட்டனர். ராஜாஜி ஸ்ரீபிரகாசாவை அழைத்தார். என். கோபாலசாமி ஐயங்கார் குறிப்புக்காட்டினார். அனந்தசயனம் ஐயங்கார் நல்வரவு கூறினார். டில்லியில் நடந்த பிரிவுபசாரத்தில் ஸ்ரீபிரகாசா பேசியதின் சாராம்சம் இது.

நேரு உலகப்புகழ் வாய்ந்தவர். அவருக்குத் தெரியாததில்லை, ஆனால் சென்னை என்றால் ராஜாஜி, சந்தானம், அனந்தசயனம், கோபாலசாமி இவர்களில் அடங்கிவிட்டதாகக் கருதிவிடுகிறார். இல்லாவிட்டால் பழுத்த காங்கிரஸ்காரரை, டில்லியில் மந்திரியாயிருந்தவரை, காங்கிரஸ் சார்பில் உத்தரப்பிரதேசத்திலிருந்து பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஒருவரைச் சென்னை கவர்னராக்க அவர் துணிந்திருப்பாரா?

சென்னை கவர்னர் போலீஸ் புடைசூழ ஊர்வலம் வந்தார் — காங்கிரஸ்காரர்கள் மகிழ்ந்தார்கள்; ராஜாஜி மகிழ்ந்தார். ஆனால் சென்னை ராஜ்யமக்கள் அவர் நியமனத்தை ஒருமுகமாகக் கண்டித்திருக்கிறார்கள். சென்னையில் நடந்த கறுப்புக்கொடி வரவேற்பும் நாடெங்கும் நிகழ்ந்த கண்டனக் கூட்டங்களும் டில்லி திணிக்கும் கவர்னரை வரவேற்கவில்லை; கண்டித்திருக்கிறார்கள். புதிய-

கவர்னருக்கு அந்தச் செய்திகள் கிடைக்காமலா போகும்? நேருவின் பார்வைக்கு அவை தப்பிவிட முடியுமா?

காங்கிரஸ் வீழ்ச்சியைக் கண்டும் காங்கிரஸ் தலைமையினர் இப்படி நடந்துகொள்வது விசித்திரம்தான். ஸ்ரீபிரகாசா நகைச்சுவையுள்ளவராம். மகிழ்ச்சியான சேதி. சென்னை தரும் துயரச் செய்திகளை அவர் ரசிப்பதோடு நின்றுவிடக் கூடாது; தன்னை அனுப்பிவைத்த திருமேனிகளுக்கும் அவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

எந்த மந்திரிசபை ஏற்படும்? காங்கிரஸ்காரர்கள் 160 பேர் எங்களோடு இருக்கிறார்கள் — கல்கத்தா போய் வந்தபின் தலைவரைத் தேர்ந்தெடுப்போம்; மந்திரிசபை அமைப்போம் என்கிறார்கள். ஐக்கிய முன்னணி மந்திரிசபைக்கு நாட்டு மக்களின் ஆதரவு பெருகி இருக்கிறது. இதுவரை 164 பேர் சேர்ந்துவிட்டார்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். செட்டிநாடு ராஜா மற்றொரு பக்கம் சல்லடம் காட்டுகிறார். ஸ்ரீபிரகாசா இந்நிலைமையை எப்படித் தீர்ப்பார்? தான் ஒரு காங்கிரஸ்காரர் என்பதை மறந்து அவர் செயலாற்றுவாரென்றுதான் அனைவரும் எதிர்பார்க்கின்றனர். அந்த நம்பிக்கைக்கு அவர் பாத்திரமானவராக விளங்கவேண்டுமென்பதுதான் நம் ஆசை.

காலமும் கருத்தும்

புதுமைப்பித்தன் பரிசு

புதுமைப்பித்தன் நினைவாகச் சிறுகதைப் பரிசுத் திட்டம் ஒன்று வெளியிட்டிருக்கிறோம். சென்ற இதழிலும் இந்த இதழிலும் அப்போட்டிபற்றிய விவரங்களைத் தனியே காணலாம். தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு'பொன்னி' மறைமுகமாகச் செய்துவரும் தொண்டுகளை எதிர்காலம் போற்றுவது திண்ணம். ஒவ்வொரு துறையிலும் புதுமையும் தமிழ்ப் பண்பும் நிலவவேண்டும் என்பதற்காகப் 'பொன்னி' அரும்பாடுபட்டு வந்திருக்கிறது. இன்னும் எத்தனையோ துறைகள் நம் கவனத்தில் இருக்கின்றன. பல பரிசுத் திட்டங்களை அவ்வப்போது அறிவிக்க எண்ணியுள்ளோம். சிறுகதை எழுதுவது தமிழருக்குச் செங்கரும்பு சாப்பிடுவது போல. தமிழ் மறுமலர்ச்சி சிறந்த சிறுகதை இலக்கியத்தை உள்ளடக்கியே நிற்கிறது. இளம் எழுத்தாளர்களின் ஆர்வம் கணக்கில் அடங்காது. அவர்களில் எத்தனையோ மாணிக்கங்கள் இருக்கக்கூடும்! இளம் எழுத்தாளர்களிடம் பத்திரிகையுலகம் காட்டும் அலட்சிய மனோபாவம் அவர்கள் திறமைகளைக் கருக்கிவிடும். இந்நிலை மாறவேண்டும் என்ற ஆர்வத்திலேயே இப்போட்டியைத் தொடங்கியிருக்கிறோம். ஆயிரக்கணக்கான கதைகள் வருமென எதிர்பார்க்கிறோம். இளம் எழுத்தாளர் அனைவரையும் கலந்து கொள்ளும்படி மகிழ்வோடு அழைக்கிறோம்.

நண்பர்கள் இல்லையா?

இத்தலைப்பிட்டு ஒரு விளம்பரம் 'பொன்னி'யில் வருகிறது. 'பொன்னி' படிக்கின்றவர்களுக்கு அது ஒரு அன்புக் கட்டளை. 'பொன்னி' படியாத வீடு தமிழ் வீடு அல்ல; 'பொன்னி' பாவாத ஊர் தமிழ் ஊர் அல்ல—என்ற நிலை ஏற்படவேண்டும். இன்று ஏற்பட்டுள்ள அரசியல் சூழல், 'பொன்னி' போன்ற, மக்கள் சார்பாகப் பேசும் பத்திரிகைகளின் தேவையை அதிகப்படுத்தியிருக்கிறது. 'பொன்னி'க்கு விளம்பர வருவாய் இல்லை; எனினும் புகழ் நிலையிலுள்ள மற்ற பத்திரிகைகளின் தரம் 'பொன்னி'யில் நிலவவேண்டும் என்பதிலேயே கருத்துச் செலுத்துவதால் பெரும்பொருள் செலவாகும் என்று கூறவேண்டியதில்லை. லட்சம் பிரதிகள் 'பொன்னி' செலவழிய வேண்டாமா? வாரம் ஒருமுறை

கவர்னருக்கு அந்தச் செய்திகள் கிடைக்காமலா போகும்? நேருவின் பார்வைக்கு அவை தப்பிவிட முடியுமா?

காங்கிரஸ் வீழ்ச்சியைக் கண்டும் காங்கிரஸ் தலைமையினர் இப்படி நடந்துகொள்வது விசித்திரம்தான். ஸ்ரீபிரகாசா நகைச்சுவையுள்ளவராம். மகிழ்ச்சியான சேதி. சென்னை தரும் துயரச் செய்திகளை அவர் ரசிப்பதோடு நின்றுவிடக் கூடாது; தன்னை அனுப்பிவைத்த திருமேனிகளுக்கும் அவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

எந்த மந்திரிசபை ஏற்படும்? காங்கிரஸ்காரர்கள் 160 பேர் எங்களோடு இருக்கிறார்கள் — கல்கத்தா போய் வந்தபின் தலைவரைத் தேர்ந்தெடுப்போம்; மந்திரிசபை அமைப்போம் என்கிறார்கள். ஐக்கிய முன்னணி மந்திரிசபைக்கு நாட்டு மக்களின் ஆதரவு பெருகி இருக்கிறது. இதுவரை 164 பேர் சேர்ந்துவிட்டார்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். செட்டிநாடு ராஜா மற்றொரு பக்கம் சல்லடம் காட்டுகிறார். ஸ்ரீபிரகாசா இந்நிலைமையை எப்படித் தீர்ப்பார்? தான் ஒரு காங்கிரஸ்காரர் என்பதை மறந்து அவர் செயலாற்றுவாரென்றுதான் அனைவரும் எதிர்பார்க்கின்றனர். அந்த நம்பிக்கைக்கு அவர் பாத்திரமானவராக விளங்கவேண்டுமென்பதுதான் நம் ஆசை.

காலமும் கருத்தும்

புதுமைப்பித்தன் பரிசு

புதுமைப்பித்தன் நினைவாகச் சிறுகதைப் பரிசுத் திட்டம் ஒன்று வெளியிட்டிருக்கிறோம். சென்ற இதழிலும் இந்த இதழிலும் அப்போட்டிபற்றிய விவரங்களைத் தனியே காணலாம். தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு 'பொன்னி' மறைமுகமாகச் செய்துவரும் தொண்டுகளை எதிர்காலம் போற்றுவது திண்ணம். ஒவ்வொரு துறையிலும் புதுமையும் தமிழ்ப் பண்பும் நிலவவேண்டும் என்பதற்காகப் 'பொன்னி' அரும்பாடுபட்டு வந்திருக்கிறது. இன்னும் எத்தனையோ துறைகள் நம் கவனத்தில் இருக்கின்றன. பல பரிசுத் திட்டங்களை அவ்வப்போது அறிவிக்க எண்ணியுள்ளோம். சிறுகதை எழுதுவது தமிழருக்குச் செங்கரும்பு சாப்பிடுவது போல. தமிழ் மறுமலர்ச்சி சிறந்த சிறுகதை இலக்கியத்தை உள்ளடக்கியே நிற்கிறது. இளம் எழுத்தாளர்களின் ஆர்வம் கணக்கில் அடங்காது. அவர்களில் எத்தனையோ மாணிக்கங்கள் இருக்கக்கூடும்! இளம் எழுத்தாளர்களிடம் பத்திரிகை உலகம் காட்டும், அலட்சிய மனோபாவம் அவர்கள் திறமைகளைக் கருக்கிவிடும். இந்நிலை மாறவேண்டும் என்ற ஆர்வத்திலேயே இப்போட்டியைத் தொடங்கியிருக்கிறோம். ஆயிரக்கணக்கான கதைகள் வருமென எதிர்பார்க்கிறோம். இளம் எழுத்தாளர் அனைவரையும் கலந்துகொள்ளும்படி மகிழ்வோடு அழைக்கிறோம்.

நண்பர்கள் இல்லையா?

இத்தலைப்பிட்டு ஒரு விளம்பரம் 'பொன்னி'யில் வருகிறது. 'பொன்னி' படிக்கின்றவர்களுக்கு அது ஒரு அன்புக் கட்டளை. 'பொன்னி' படியாத வீடு தமிழ் வீடு அல்ல; 'பொன்னி' பரவாத ஊர் தமிழ் ஊர் அல்ல—என்ற நிலை ஏற்படவேண்டும். இன்று ஏற்பட்டுள்ள அரசியல் சூழல், 'பொன்னி' போன்ற, மக்கள் சார்பாகப் பேசும் பத்திரிகைகளின் தேவையை அதிகப்படுத்தியிருக்கிறது. 'பொன்னி'க்கு விளம்பர வருவாய் இல்லை; எனினும் புகழ் நிலையிலுள்ள மற்ற பத்திரிகைகளின் தரம் 'பொன்னி'யில் நிலவவேண்டும் என்பதிலேயே கருத்துச் செலுத்துவதால் பெரும்பொருள் செலவாகும் என்று கூறவேண்டியதில்லை. லட்சம் பிரதிகள் 'பொன்னி' செலவழிய வேண்டாமா? வாரம் ஒருமுறை

> ஒரு மனிதனின் வெற்றியின் உண்மை அளவு அவன் சேமிக்கும் பணத்தின் மதிப்பல்ல; அவன் எத்துணை கஷ்டப்பட்டு உழைக்கிறான் என்பதல்ல; அல்லது எவ்வளவு குறைவாக அவன் உழைக்கிறான் என்பதுமல்ல; அதுவரை அவன் அடைந்த முன்னேற்றத்தின் எல்லையுமல்ல—அவன் உண்மையாக எவ்வளவு நேரம் மகிழ்ச்சியுடன் இருக்கிறான் என்பதே!

'பொன்னி' பவனிவர வேண்டாமா? எல்லாம் உங்கள் உற்சாகத்தில் அடங்கியிருக்கிறது. ஒருவர் நினைத்தால் நான்குபேர்; ஆயிரம் பேர் நினைத்தால் நாலாயிரம் பேர்! இந்த முயற்சியில் ஈடுபடுவோர் 'பொன்னி' நிலைத்திருக்க உதவுகிறார்கள். இலங்கையினின்றும் தமிழகத்தினின்றும் குறிப்பாக மாணவர்கள் பலரிடமிருந்து 4 பேர் சேர்க்துக் கூப்பன்கள் வந்திருக்கின்றன. இவ்வாறு சேர்த்தனுப்பும் நண்பர்களின் புகைப்படங்களைப் 'பொன்னி'யில் வெளியிட எண்ணுகிறோம். செய்தியைப் பரப்புங்கள்; 'பொன்னி'யை ஓடோடி அறிமுகப்படுத்துங்கள்; உங்கள் தொண்டுகளை நாங்கள் மறவோம்.

தென்னாப்பிரிக்கா

தென்னாப்பிரிக்காவில் மலான் காட்டும் நிறவெறியை இனி உலகம் பொறுக்காது. தென் ஆப்பிரிக்கா சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பே நிறவெறியை எதிர்த்து முடிவு செய்திருக்கிறது. வெள்ளையரல்லாதாருக்குத் தனி வாக்காளர் ஜாபிதா வைத்து அவர்கள் சிலரைமட்டும் (அதுவும் வெள்ளையரையே) தேர்ந்தெடுக்கும் உரிமையையே வழங்கியிருந்தார் மலான். அந்த வெறியடங்கத்தான் இந்தத் தீர்ப்பு வந்திருக்கிறது. இனி மலான் என்ன செய்வார்? நிறவெறியை எதிர்த்துப் போராடும் மணிலால் காந்தி கடந்த பதினைந்து நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார். வெளிநாட்டாரின் கவனம் அங்கே ஈர்க்கப்பட வேண்டும். உலகைக் காப்பாற்ற உணவும் யுத்த தளவாடங்களும் அருளும் அமெரிக்கா, தென் ஆப்பிரிக்காவில் நிலவும் காட்டுமிராண்டி நாகரிகத்தைக்கண்டிக்க முன்வரவேண்டும். காமன்வெல்த் தலைமை தாங்கும் பிரிட்டன் என்ன செய்யப் போகிறது? கொரியாவில் தலையிட்ட ஐ. நா. சபை ஏன் தென்னாப்பிரிக்கா விஷயத்தில் வாய்மூடிமௌனியாய் இருக்கிறது? உலகம் வெள்ளையர் என்றும் அல்லாதார் என்று பிரிக்கப்பட்டு நீதி செலுத்தப்படும் வரை சமாதானம் நிலைப்பது அரிது.

விலைகள் இறங்கின

தங்கம், வெள்ளி விலைகள் சரிந்தன. பருப்பு வகைகள், எண்ணெய் வகைகள், மிளகாய், மல்லி, மிளகு, கடுகு போன்ற பண்டங்கள் படுபாதாளத்திற்கு வந்தன. பாங்குகளில் அதிகப்படி கடன் அளிப்பதை நிறுத்தியதாலேலே இந்நிலை ஏற்பட்டிருக்கிறதாம்! ஏற்றுமதி வரி கூடியதும் காரணமென்று வாதிக்கின்றனர் சிலர். எப்படியோ உலகம் சமாதானத்தை நோக்கிச் செல்கிறது. இனி யுத்தத்தைக்

காட்டிப் பொருள் சேமிக்க முடியாது. இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு படிப்படியாக ஏறிய விலைகள் எப்பொழுது இறங்கின? கொரியாப்போரின் காரணமாக மேலும் விலை ஏற்றம் தான்! இந்த விலையேற்றம் நியாய மென்று யார் கூற முடியும்? அப்போது லாபம் சம்பாதித்தவர்கள் யாரிடம் சொன்னார்கள். விலைவாசி இறங் கும்போது மட்டும் கூச்சலிடும் பரமாத்மாக்கள் பொதுமக்களை நினைத்தார்களா? நடுத்தரக் குடும் பங்களை நினைத்தார்களா? ஏறும் விலைவாசிகளினால் தடுமாறும் குடும்பகளைப் பற்றிச் சிந்தித்தார் களா? அவர்களுக்கு அவர்கள் லாபம் பெரிது. விலைகள் விழ்ந் தும் சில்லறைக் கடைகளை அது இன்னும் எட்டவில்லை; மக்கள் பயன் பெறவில்லை. அதற்குள் சர்க்கார் தலையிட்டு ஏற்றுமதி வரியைக் குறைத்தது, சூதாட் டக்காரர்களின் பக்கமே மத்திய சர்க்கார் இயங்குகிறது என்பதை அல்லவா காட்டுகிறது! நேரு விலைவாசி இறங்குவது அவசிய மென்கிறார்; மற்றதாப் வரவேற் கிறார். செயலிலோ விலைகளை மேலும் இறங்கவிடாமல் தடுக் கிறார்கள். பொதுமக்கள் விலை களைக் குறைக்கக் கிளர்ச்சி செய்ய வேண்டும். ஊருக்கு ஊர் கூட் டுறவுப் பண்டகசாலைகள் ஏற்பட வேண்டும். தேவையில்லாத பண் டங்களை மக்கள் வாங்கக்கூடாது. இந்நிலை ஏற்பட்டால்தான் விலை வாசி இறக்கத்தால் உண்மை யான பயன் காண முடியும்.

பரிசு பெற்ற தலைப்பு

10–3–52 மேலட்டையில் வெளிவந்த நிழற்படம் குறித்து எங்களுக்குக் கிடைத்த தலைப்புகளில் கீழ்க்கண்ட தலைப்பு ரூ. 5–பரிசு பெறுகிறது.

பார்வையில் பேசும் பதுமை

பரிசு பெற்றவர்:

ஆர். லலிதா

C/O ராதப்பிள்ளை
கம்பவுண்டர்
சுவாமி சன்னிதித் தெரு
சங்கரநயினார்கோயில்

மற்றும் பாராட்டுக்குரிய தலைப்புகளைக் கீழே தந்திருக்கிறோம்.

தலைப்பு:

வாழ்வின் முதலரங்கம்—
வைகறையின் இளந்தென்றல்

அ. ச. கணேசன்

திருவல்லிக்கேணி

தலைப்பு:

வாழ்க்கை ஏட்டில்
மகிழ்ச்சியின் முகப்பு

கே. குமரப் பிள்ளை

குரிசிலாப்பட்டு

(வ. ஆ. மாவட்டம்)



பதின்மூன்றாவது அத்தியாயம்

தவறான சேர்க்கைகளால் தகாறான விளைவுகளைக் காணும் ரசாயன மாணவனைப் போலானான் சோமு. அவன் வாழ்வில் ஏற்பட்ட அந்த இலைஉதிர்காலம் சிறிதுகாலமாகவே அவன் எதிர்பார்த்திருந்ததுதான். மொட்டை மரமாகவேண்டுமே என்பதற்காகத்தான் அஞ்சினான். அதனால் தான் கல்லாக இருந்த தன் உள்ளத்தைக் கனலாக்கிக் காட்டினான் சேகரனிடம். ஆனால் தொடர்ந்து உருவான நிகழ்ச்சிகள் அவனைப் பட்ட மரமாக்கவே பாடுபட்டன. ஊத ஊத உப்பி, ஒரு நிலைக்கு வந்தவுடன் உடைந்து சிதறும் பலூனைப்போலான அவன் வாழ்க்கை....! வளமையை எட்டிப் பிடிக்க இயலவில்லையே என்ற ஏக்கம்—அவனுக்கு ஏணியாக அமைய எவரும் முன்வரவில்லையே என்ற கோபம்! மலர்க் காடாக உருவாகவேண்டிய மனித உள்ளத்தை மயானபூமி யாக்கும் இந்த உணர்ச்சிகள் அவன் மனதிலும் மண்டிவிட்டன.

அன்று ஸ்டுடியோவுக்குப் போயிருந்த சுந்தரிக்கு விஷயத்தை யாரோ இரகசியமாக வெளியிட்டார்கள். சந்தேகத்துக்குப் பலரிடம் பேச்சுக் கொடுத்து அது உண்மை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டாள். எல்லோருக்குமே அது தெரிந்திருந்தது—ஆனால் ஒவ்வொருவரும் அதை ஒளித்து வைக்கவேண்டியது எனத்தான் கருதினர். இரகசியம் என்ற முத்திரை பதிப்பித்ததே விரைவில் அதுபரவவேண்டும்என்பதற்குத்தானே! அளவுகடந்த மகிழ்ச்சி சுந்தரியை ஆட்கொண்டது. மோகனாவிடமும் சேகரனிடமும் இதைச்சொன்னால்...? பூட்டப்பட்டிருந்த விலங்குகள் முறிக்கப்பட்டன என்று பூரித்துப் போவார்கள். இந்த எண்

ணத்தோடேயே வீட்டுக்கு வந்த சுந்தரி நுழைந்ததும் நுழையாததுமாக, "தெரியுமா அக்கா உனக்குச் சமாச்சாரம்? சோமுவின்மேல் பிடிவாரண்ட் எடுத்துவிட்டார் சினிமாக் கம்பெனி முதலாளி! நாலைந்து நாட்களாக ஆளையே காணுமாம்" என்று அந்த இரகசியத்தை வெளிப்படுத்தினாள்.

"அப்படியா?" என்று அவர்கள் இருவரும் துள்ளிக் குதிப்பார்கள் என்று ஆனந்தத்தோடு எதிர்பார்த்த அவளுக்கு ஏமாற்றந்தான் ஏற்பட்டது. எதிர்பாராத நேரத்தில் வெடிசத்தம் கேட்டதுபோலத் திடுக்கிட்டுப் போனான் சேகரன். அவன் உள்ளத்தின் ஒருபாகத்தை அரிந்தெடுத்து வீசியதைப்போன்ற உணர்ச்சிதான் அவனுக்கு ஏற்பட்டது. குழந்தைகள் தொல்லையைப் போக்கக் குடித்தனக்காரர்களை வீட்டைக் காலிசெய்யும்படி நிர்ப்பந்தித்த வீட்டுக்காரன், காலியான பிறகு வெறிச்சென்று இருக்கும் தன் வீட்டை விரக்தியோடு நோக்குவதைப்போலவே அவனும் இருந்தான். பாதாளத்தில் விழுந்து பிறகு எழுந்து, தலை நிமிர்த்திப் பார்க்கும் வரையில் ஏற்படுகிற அத்தனை உணர்ச்சிகளும் மோகனவிடம் இடம்பெற்றன. மகிழ்ச்சியை எதிர்பார்த்த இடத்தில் மனக்கலக்கம் உருவாவதைப் பார்த்த சுந்தரிக்கு என்னவோபோலிருந்தது. இத்தனைநாட்களும் அங்கே நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் வெறும் நடிப்புத்தானு என்றுகூடச் சந்தேகப்பட்டாள்.

"பைத்தியக்காரன்! வாழ்வை ஒரு சூதாட்டம் என்று நினைத்து ஏமாந்து போனான்" என்றான் சேகரன் நெடுநேரங் கழித்து.

எதிலேயோ ஆழ்ந்திருப்பதைப் போல இருந்த மோகனா; அவனை ஒருமுறை பார்த்துவிட்டுத் தலையைத் திருப்பிக் கொண்டாள். சுந்தரிக்கு இது பிடிக்கவில்லை. தேங்கிப்போன நிகழ்ச்சிகளை எப்படியாவது ஓடவைக்கவேண்டும் என நினைத்தாள்.

"சூதாடிச் சுகவாழ்வு நடத்தக் கூட ஒரு குறிப்பிட்ட அந்தஸ்துள்ளவர்களுக்குத்தான் உலகம் அனுமதி தருகிறது!" என்று சொல்லிவிட்டு அவர்கள் இருவரையும் பார்த்தாள். உலகத்தின்மேல் அவளுக்கு இருந்த வெறுப்பு அவளுடைய குரலில் தொனித்தது. ஆனால் அந்த இருவரும் எந்த வித மாறுதலும் அடையாமலே இருந்தனர். மௌனத்தால் முறிக்கப்படும் தன் பேச்சை நிறுத்திவிட்டால் ஒருவேளை தோல்வியடைந்து விட்டோம் என்பது தெரிந்து போகுமோ என்ற எண்ணம் அவளுக்கு ஏற்பட்டது. சேகரன் பக்கமே பார்த்துப் பேசினாள்.

"கைநிறையத் துருப்புச் சீட்டுகளை அடுக்கி வைத்துக்கொண்டு சிலர் துள்ளிக் குதிப்பார்கள். ஆனால் அவர்களிடம் இருக்கும் தழைச்சீட்டுகளுக்குத்தகுந்தாற்போலவே இறக்கம் வந்துகொண்



டிருக்கும். இறுதி முடிவு...? தோல்வி!''

"பேஸ்து!" என்று சொல்லாமற் சொல்லிக் காட்டினன் சேகரன். பரந்த பாழ்வெளியைப் பார்ப்பதை போலவே அவளையும் பார்த்தான். மோகனுவின் கண்களில் இருந்த கருவிழிகள் செயலிழந்து காணப்பட்டன. எண்ணிக்கையே இல்லாத சிறு தழைகளால் எதுவும் பலனில்லை என்ற எண்ணத்தோடு தன் காரியத்தைக் கவனிக்கப் புறப்பட்டாள் சுந்தரி.

அன்று முழுதும் சேகரனுக்கும் மோகனுவுக்கும் சித்தம் கலங்கித்தான் இருந்தது. போதைப் பொருள்களால் கெம்பையுந் தெளிவையும் பெற்று வந்தவன் மதுவிலக்கைப் பற்றிக் கேள்விப்படும்போது, எப்படி எப்படி நினைப்பானே அப்படி அப்படியே நினைத்தார்கள். சேகரன் ஏதாவது சோமுவைப் பற்றித் தன்னிடம் சொல்லுவான் என்று மோகனு எதிர்பார்த்தாள். மோகனு தன் நண்பனைப்பற்றி எதுவும் பேசமாட்டாளா என்று ஏங்கித் துடித்தான் சேகரன். ஆனல் அவர்கள் இருவருடைய உள்ளங்களிலும் அனுதாபம் நிறைந்த சொற்களைத் தவிர வேறெதுவும் பேசப்படக்கூடாது என்ற எண்ணம் மட்டும் இருக்கத்தான் செய்தது. ஆனல் ஏனே தெரியவில்லை, இருவருமே வாய்திறந்து பேசவில்லை. அந்த எதிர்பாராத துக்கத்தைப்பற்றிக் கலந்து விவாதிக்க வேண்டும் என்று மட்டும் இருவர் உள்ளங்களும் துடியாய் துடித்துக்கொண்டிருந்தன.

நள்ளிரவு. அயர்வு உயிர்களை உறக்கம் என்ற தொட்டிலில் இட்டு ஆட்டிக் கொண்டிருந்த அந்த நேரத்தில் இதயங்களை எதனாலோ நிரப்பியிருந்தவர்கள் மட்டும் இமை மூட முடியாமல் தவித்தனர். பாரம் தாங்காத உள்ளங்கள் வெளிப்படுத்தும் பெருமூச்சுக்கள்...... புழுங்கித் துடிப்போரின் புலம்பல்கள்...... வெறிபிடித்தலைவோரின் வீண் கூச்சல்கள்......இருள் தனக்கே உரித்தான இந்த இசையரங்கை அமைத்திருந்தது. உறக்கத்தை ஓத்திப்போடும் பண்டங்களை விற்கும் டீக்கடைகளும் வெற்றிலை பாக்குக் கடைகளுமே திறந்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் தணிந்து எரிந்து கொண்டிருந்த விளக்குகளைப் போலவே தளர்ந்து காணப்பட்டனர் கடை வியாபாரிகள். உலகத்தின் எந்தவித ஒழுங்குக்கும் உட்படாத உதிரிகள் சிலர் தெருக்களில் சிதறிக் கிடந்தனர். எதிர்பாராது எழுந்தடங்கும் காலடி ஓசைகளுக்கு எதிரொலிபோல இடைவேளைவிட்டு நாய்கள் குரைத்துக்கொண்டிருந்தன. அரவமற்ற நேரத்தில் ஆட்சிபுரியும் அமைதி என்ற அழகிய கன்னியின் முகத்தில் வெடித்திருந்த இந்தப் பருக்கள் அவளை ஓரளவுக்கு அலங்கோலப் படுத்தத்தான் செய்தன!

பதுங்கிப் பதுங்கி வீதியில் நடந்துகொண்டிருந்தான் சோமு. நாலைந்து நாட்களாக அவன் நடத்தி வந்த நாடோடி வாழ்வில் அவனுக்கே சலிப்பேற்பட்டிருந்தது. புலியாக உலவிய அவனைப் புழுவாக்கிவிட்ட சூழ்நிலையை ஏற்றுச் சகித்துக்கொள்ளும் நெஞ்சுரம் அவனை விட்டு விலகி வெகு நாட்கள் ஆகிவிட்டன. இன்னும் சிறிதுகாலம் இதே நிலையில் இருக்க நேர்ந்தால்...? மனிதன் எப்படி மிருகமாகிறான் என்ற விளக்கத்தை அவன் வாழ்வே அவனுக்குக் கற்பித்துவிடும். தனக்கு இரக்கங் காட்டக்கூடிய எவரும் இந்த உலகத்தில் இருந்ததாகவே தெரியவில்லை அவனுக்கு. எண்ணங்களால் இதயம் முழுதும் தேடித் துழாவினன். எத்தனையோ உருவங்கள் அவற்றில் சிக்கின. ஆனல்...அத்தனை பேரும் அவனல் வெட்டி முறிக்கப்பப்பட்டவர்கள்!

கொந்தளிக்கும் எண்ண அலைகள் எப்போதோ அவன் வாழ்வில் சிதறிச் சின்னபின்னமான கலத்தின் ஒரு துண்டுப் பலகையை அவனுக்குக் காட்டின. ஒரு பெண்! அவனையும் ஒருத்தி ஒருகாலத்தில் காதலிக்கத்தான் செய்தாள். ஒருத்தியல்ல, எத்தனையோ ஏமாளிகள் என்று அவனுக்கு எடுத்துக் காட்டிற்று, அப்போது தலைகாட்டிய ஞாபகசக்தி. குழலில்லாக் கோபாலனக அவன் வாழ்ந்த காலம் ஒன்று இருக்கத்தான் செய்தது — கும்மியடிக் காத கோபிகைகள் அவனைச் சுற்றி நின்று கும்மாளம் போட்டனர் அப்போதெல்லாம்!

ஆனால்......அத்தனை பேரும் இவனை நம்பி மோசம் போகவே நேரிட்டது. அந்தக் கூட்டத்திலே ஒருத்தி......அன்பால் இவனை ஆராதனை செய்தவள்... ஆணின் உள்ளத்தை அடிமைப் படுத்துவதற்கு முன்னால் பெண் தன் உடலை அவனுக்கு அடிமைப்படுத்திவிடக் கூடாது என்ற உண்மையைப் பருவத் துடிப்புக்குப் பலியாக்கியதால் பாழான பாவை! அன்று மோகனாவை ஆலயத்தில் இவன் பார்த்தபோது இவனைக் கண்டு தான் அவன் பயந்தோடினான். அவள் நினைவு அவனுக்கு ஏற்பட்டது. நடந்துகொண்டே சிரித்தான் – சிரித்துக்கொண்டே நடந்தான் சோமு!

அந்த வீட்டின் முன் நின்று மெல்லக் கதவைத் தட்டினான்.

"யார்?" ஒரே சொல் ஒலித்தது.

மறுபடியும் கதவைத் தட்டினான். உளளே யாரோ ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டார்கள். கதவை நோக்கிவரும் காலடி ஓசைகள் இவன் காதுகளில் விழுந்தன.

"யார் அது?"

"நான்தான் சோமு."

"என்ன, சோமுவா!"

கேள்விகுறியில் சிக்கிக் கொண்டு ஊசலாடியது ஆச்சரியக்குறி! கதவும் திறக்கப் பட்டது. திகைப்பு மாறுமலே உள்ளே காலை எடுத்துவைத்தான் சோமு.

"வாருங்கள் சோமு."

குரலில் தளர்ச்சியோ தடுமாற்றமோ இல்லை. ஆச்சரியத்தால் தாக்குண்டு அவனை நிமிர்ந்து பார்த்தான் சோமு. கனிவும் கம்பீரமும் கலந்திருந்த அவளுடைய விழிகள் கலங்கரை விளக்குபோல அவனுக்குக் காட்சியளித்தன. உடைந்து சிதறுமல் ஒதுங்கவாவது முடிந்ததே என்ற மகிழ்வால் மலர்ந்தான் அவன்.

சஞ்சலம் சிறுசிறு அலையாகத் தோன்றி மறைந்தது அவள் முகத்தில். அவனுடைய உருவத்தை ஒவ்வொரு அங்கமாக உற்றுநோக்கினாள்.

"உட்காருங்கள் சோமு. உணவு தயாரிக்கிறேன்" என்று சொல்லித் திரும்பினாள் அவள்.

"இல்லை, பத்மா! இப்போது எனக்கொன்றும் தேவையில்லை. வீணாகத் தொல்லைப்படுத்திக் கொள்ளாதே" என்று உபசாரத்துக்காக சோமு சொன்ன போது அவனுடைய உள்ளமே அவனைக் கண்டித்தது.

"நான் உங்களை உணராதவள் அல்ல சோமு. என்னிடம் கூடவா ஒளிவு மறைவுகள்? கூச்சப்படாதீர்கள்!" என்று சிரித்துக்கொண்டே பேசினாள் அந்தப் பெண். தன்னை ஏமாற்ற நினைக்கும் தன் சேயை அன்போடும் அனுதாபத்தோடும் நோக்கும் தாயெனவே நின்றாள் அவள். பிறகு திரும்பிச் சமையலறைக்குள் போய் மறைந்தாள்.

அவர்களுடைய தொடர்பில் ஏற்பட்ட நீண்ட இடைவேளையைப் பற்றி நினைவே இல்லாத

வள்போல அவள் நடந்துகொண்டது சோமுவுக்குச் சந்தேகத்தைக் கிளப்பிவிட்டது. தன் எதிரிலே இருந்து மருடிவாசிப்பவளுல் என்ன விளையுமோ என்ற மருட்சியால் எச்சரிக்கையாகப் படமெடுத்து நிற்கும் நாகம்போலானுன்.

எதிரிலிருந்த புத்தக அலமாரியில் அழகாக வரிசை வரிசையாக அடிக்கிவைக்கப்பட்டுருந்த புத்தகங்கள் அவன் கவனத்தைக்கவர்ந்தன. ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டினுன், அதன் இடையில் ஒரு கடிதம்...உறை கிழிக்கப்படாமலே இருந்தது. அதன் மேல்...? "திரு. சோமு" என்ற பெயர்மட்டுந்தான் இருந்தது—விலாசம் காணப்படவில்லை. காலியாக இருந்த அந்தப் பகுதி விலாசமில்லாத பேர்வழி என்று இவனைப் பார்த்துக்கைகொட்டிச் சிரிப்பதுபோலவே தோன்றிற்று. பத்மா என்ன செய்கிருள் என்பதைக் கவனிக்க ஓசைப்படாமல் சென்று அடுப்பங்கரைக்குள் எட்டிப் பார்த்தான்.'ஸ்டவ்' எரிந்துகொண்டிருந்தது. தாம்பாவர்ணமான தீ தன் மஞ்சள் நிற நாக்குகளால் அதன்மேல் வைக்கப்பட்டிருந்த தோசைக்கல்லை நக்கிப் பார்த்துக்கொண்டிருந்தது. அதன் எதிரில் நின்று என்னவோ செய்துகொண்டிருந்தாள் பத்மா.

திரும்பிவந்து உட்கார்ந்து கடிதத்தின் உறையைக் கிழித்தான் சோமு. கடிதத்தின் தேதி மூன்றுவருடங்களுக்கு முந்தியதாக இருந்தது. படிக்கத் தொடங்கினுன்.

"அன்புள்ள சோமு!

இதயத்தில் நெருப்பும் எதிரே பாரில் படர்ந்துள்ள பால்வண்ண நிலவின் ஒளியும் என் கருத்துக்கள் எழுத்துருவாவதைச் சிதைத்துத் தொலைக்கின்றன. மெல்லத்தான் சாய்க்கிறேன் என் உள்ளத்தை—ஆனுல் அது எப்படியோ குப்புறக் கவிழ்ந்து விடுகிறது. சுமுறலைக் கோர்வையாக அமைப்பதென்னவோ கடினமாகத்தான் இருக்கிறது எனக்கு. எழுதி எழுதிக் கிழித்துப் போட்ட கடிதங்களின் துண்டுகள்......என் மனதின் பிரதிபிம்பமாக இருந்து என்னை வாட்டி வதைக்கின்றன.

எத்தனையோ கடிதங்கள் சவக்குழியில் போட்டுப் புதைத்ததைப் போலவே போய்விட்டன. எழுதி எழுதிக் களைத்துப் போனேன். ஆனுல் ஆசை என்னவோ என் நம்பிக்கையை நாசமாக்கவிடாமல் என்னைத் தடுத்து நிறுத்துகிறது.

நாம் காதலர்கள் என்றுகூட நீங்கள் நினைக்கவேண்டாம். உலகத்தின் ஏதோ ஒரு மூலையில் எப்போதோ தவிர்க்க முடியாத சூழ்நிலையில் அறிமுகம் ஆக நேர்ந்தவர்கள் என்ற நினைவையாவது அழிக்காமல் விட்டு வையுங்கள்.

சோமு! நிச்சயமாக நான் நம்புகிறேன். என்ருவது ஒரு நாள்—பகலில் அல்ல—இரவில் என்னைத் தேடி நீங்கள் வரு

வீர்கள் என்று. உங்கள் வாழ்வில் படர்ந்திருக்கும் ஒளி குறையும் நேரத்தில் உதவிக்கு நானொருத்திதான் தென்படுவேன். நீங்கள் கக்கிய விஷமே உங்களைக் கருக்கித் தீய்க்கும் போது என் நிழல்தான் மாற்று மருந்தாக அமையும். அந்த இரவு எதிர்பார்த்து ஆவலோடு காத்திருக்கிறேன். நள்ளிரவு நேரத்தில்கூட கதவுப்பக்கம் அரவமேதும் கேட்டால் காது கொடுத்துக் கவனிக்கிறேன். கரைந்து போன காலத்துக்கு உயிரூட்டிக் காதல் நாடகமாட வேண்டும் என்ற எண்ணத்தால் அல்ல—நீங்கள் என் உள்ளத்தில் சிரப்பிய நிகழ்ச்சிகளை உங்கள் கண்ணெதிரிலேயே காலிசெய்து விட வேண்டும் என்பதற்காகத் தான்!

உங்களுக்கு நினைவிருக்காது. கப்பல் தொழிற்சாலையிலே வேலைசெய்பவன் கிழிந்துபோன காகிதக் கப்பலைப்பற்றிக் கவலைப் பட மாட்டான்; நான் பள்ளியிலே சேர வந்திருந்தேன் என் தந்தையோடு. அன்றுதான் நாம் முதல் முதலாகச் சந்தித்தோம். எங்கே தங்குவது என்று இடந் தேடி அலைந்து கொண்டிருந்தார் என் அப்பா. அப்போதுதானே சோமு...... நீங்கள் அறிமுகமானது. உங்கள் அறையிலேயே ஒரு பாகத்தை ஒதுக்கிவிடுவதாகக் கூறினீர்கள். என் தந்தை தயங்கினர்—ஆனல் நான் ஒத்துக் கொண்டேன். ஒத்துக் கொண்டேனு? உங்கள் விழி ஒளியால் தாக்கப்பட்டேன்—தடுமாறிப் போனேன். சிரித்த முகம்—சிந்தனைக்கு விருந்தாகும் பேச்சு—சிரிக்கச் செய்யும் நகைச்சுவைத் துணுக்குகள். என்னை வேட்டையாடினீர்கள் விழிகளால்! சென்று போன நிகழ்ச்சிகள் தாம் இவை—ஆனல் சேமித்து வைக்கப்பட வேண்டிய பொக்கிஷங்கள்! காலாவதியான தபால் பில்லைகளைக் கூடக் காப்பாற்றிக் கண்காணிக்கும்போது காலங் கடந்துபோன காதல் நிகழ்ச்சிகளைக் கைதவற விடலாமா? விழியால் வேலியிட்டீர்கள்—பேச்சால் போதையூட்டினீர்கள்—செயல்களால் தூண்டில் போட்டீர்கள். என்ன இருந்தாலும் நான் ஒரு பெண் தானே என்ற சமாதானத்தை எனக்கு நானே சொல்லிக் கொண்டு உங்களிடம் ஏமாந்து போனேன். பாதுகாப்பும் பராமரிப்பும் ஏற்பட்டபிறகு அரும்பு மலர நாட்கள் பல ஆகுமா என்ன?

இன்னமும் அந்த நிகழ்ச்சிகளை மறக்க என்னல் இயலவில்லை. ஒருவேளை உங்களுக்கும், நினைவு படுத்தினல் மனம் மாறுவீர்களோ என்ற நினைப்பினல்தான் அவைகளைத் திரும்பவும் தீட்டியிருக்கிறேன்.

இதோ பாருங்கள் சோமு! என் நேரெதிரே இருக்கும் நிலா சிரிக்கிறது என்னைப் பார்த்து. எனக்கும் அதற்கும் இணைப்பாக இருந்த நீங்கள் எங்கேயோ போய்விட்டீர்களாம்! அதனல் தான் அதை அலட்சியப்படுத்தி விட்டு நான் எதிலேயோ கவனஞ் செலுத்துகிறேனும். களிப்புக்

குக் காரணமாக இருக்கும் அந்த நிலா கவலைக்கும் ஊற்றாக இருக்கிறது என்பது அந்த உதவாக்கரைக்குப் புரியாமல் போய்விட்டது. இரவல் ஒளியிலேயே இத்தனை திமிர் அதற்கு ஏற்பட்டால், சொந்தமாக மட்டும் ஒளி தர முடிந்தால் அது இன்னேரம் என்னைச் சுட்டெரித்துவிடாதா?

கடைசிமுறையாக உங்களை வேண்டுகிறேன். ஒரு முறை வருகை தாருங்கள். ஒத்துப் பேசிக்கொண்டே நம் உறவை அறுத்துவிடுவோம். இதற்கு மேல் எழுத என்னால் இயலவில்லை. அன்பின் அழைப்பை நிராகரிக்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

உங்கள்........,

பத்மா.''

குறிப்பு:—கோடிட்ட இடத்தை இஷ்டம்போலப் பூர்த்திசெய்து கொள்ளும்படி விட்டுவிடுகிறேன்.

கடிதத்தைப் படித்து முடித்ததும் சிறிதுநேரம் கல்லாகச் சமைந்திருந்தான் சோமு. பிறகு தெளிவுபெற்றான். அவன் அவளை விட்டுப்பிரிந்த கடைசி நாள் அவன் கவனத்துக்கு வந்தது.

''உற்றாரும் உறவினரும் என்னை ஒரு உதவாக்கரை என்று உதாசினப்படுத்தி விடுவார்களே, சோமு! கசக்கி எறிந்துவிட்டுப் போவது உங்களுக்கு நியாயமா?''

அவள் அழுதுகொண்டே கேட்டாள். இவன் சிரித்துக் கொண்டே அவளைப் பார்த்தான்.

''தேன் குடிக்கும் வண்டா மலரைக் காப்பாற்றுகிறது? காய்த்துக் கனியும் வரை மரந்தான் மலரைப் பராமரிக்க வேண்டும் என்று சொல், உன் சொந்தக்காரர்களிடம்!''

''நான் மலரல்லவே!''

''நீ ஒத்துக்கொள்ள மறுத்தாலும் உலகம் அப்படித்தானே சொல்லுகிறது. ஆனால் எவனாவது மதிக்கும் மானுக்கும் இணையாக்கிக் காட்டுகிறானா? சிங்கம்—புலி—காளை! கட்டுப்படாத முரட்டு மிருகங்களாகத் தன்னை ஆக்கிக்கொண்டான் ஆண். எளிதில் கட்டுப்படுகிற கசங்கி விடுகிற—கருகித் தீய்கிற பொருள்களையே பெண்ணுக்கு உவமையாக்குகிறான்! முட்டாள்தனத்தை முகஸ்துதி என்று பெண்கள் ஏற்றுக் கொள்ளுகிற வரையில் உவமைகளைப் போலத்தானே உண்மையும் ஆகும்!''

''அறிவியக்கவாதி என்று நான் நம்பிய நீங்களா என் வாழ்வைச் சிதைத்துவிட்டுச் சிரித்துப் பேசுகிறீர்கள்?''

''நான் இப்போது அறிவியக்கவாதி அல்ல—பசி இயக்கவாதியாக ஆகிவிட்டேன்; பத்தும் பறந்து போய்விட்டது!''

''அட மிருகமே......!''

இதை நினைத்து ஒருமுறை சிரித்தான் சோமு. இவ்வளவு நடந்த பிறகும் அவள் அந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறாள்! பெண் ஒரு விசித்திரமான முரண்பாடு என்பது மட்டுந்தான் பட்டது அவனுக்கு.

(தொடரும்)



வெறும் கலாட்டா!

போட்டி

ஹாஸ்டலில் அன்று ஒரே பரபரப்பு. பொழுது விடிந்ததும் சாம்பாரில் மிதக்கும் இட்டிலி முகத்தில்விழிக்கத்தானே தென்னாட்டிலுள்ள எந்தத் திருமேனியும் விரும்பும். டில்லி சென்றாலும் சரி, அமெரிக்காவிலிருந்து ட்ரூமன் உலகை ரட்சிக்கிறாரே, அந்தப் புண்ணியஸ்தலமான வாஷிங்டனில் வாழ்ந்தாலும் சரி, தமிழன் எதை மறந்தாலும்—தமிழென்ற 'ஒதுக்கப்பட்ட' பண்டத்தை மறந்தாலும் மறப்பான்—இட்டிலியை மறக்கமாட்டான். முன்ஷி அனைய 'மகாத்மா'க்களின் திருவருளால் இட்டிலி குறுகியது, சிறுத்தது, அடையாளமே தெரியாதபடி உருமாறியது. யுத்த கால அவசரச் சட்டங்களில் ஒன்று 'இட்டிலி' மீது அடக்கு முறையை வீசவில்லையா? "இட்டிலியே கொஞ்சநாளைக்குக் கம்யூனிஸ்டுகளைப் போல அஞ்ஞாத வாசம் செய்" என்று நவீன முனிபுங்கவர்களான 'ரேஷன்' என்று சொல்லும் படியளக்கும் பரதேவதைகள் சாபமிட்டிருந்தார்கள். அடக்குமுறைக்குள்ளாகும் தியாகிகள் மக்களின் ஆதரவைப் பெறுவது போல, இட்டிலியும் தமிழ்மகனின் நெஞ்சின் அடித்தட்டில் 'தலைமறைவாய்' அடங்கிற்று. இட்டிலியைப்பற்றியபுராணம் வளர்கிறது! எனவே இத்துடன் நிறுத்திக்கொள்வோம்.

மீண்டும் ஹாஸ்டலுக்கு வருவோம் 1934-35-ம் ஆண்டில் நடந்த 'உண்மைச் சம்பவம்' இது. இட்டிலி இருபத்தொரு குழித் தட்டில் அடுக்கடுக்காய் அவிந்துகொண்டிருந்தது. பருவமுற்றகாளை தன் உளங்கவர்ந்த பாவையைக் கனிந்து நோக்குவது போலச் சூடாக வார்க்கப்பட்ட இட்டிலி, சாம்பாரை நோக்கிக் காதல் பண்ணியது. 'கியூ' வரிசையில் மாணவர்கள் இட்டிலிக்காக அமர்ந்திருந்தார்கள். முதலில் ராஜாராமனும், செந்திலவேலனும் இடம் பிடித்துக்கொண்டார்கள். இட்டிலித் தட்டுடன் 'ஐயர்' வந்தார்; வந்துகொண்டேயிருந்தார். ஆனால் ராஜாராமனையும் செந்தில்வேலனையும் தாண்டி 'இட்டிலி' வெகுநேரமாகியும் வரவில்லை. ஏழைகள் பணக்காரர்களைப் பார்த்துக் குமுறுவது போல மற்ற மாணவர்கள் இருவரையும் பார்த்துக் குமுறினார்கள். இட்-

டிலி வரம் பெற அவர்கள் செய்த தவத்தை ராஜாராமன், செந்தில் வேலன் என்ற இரு அரக்கர்கள் அழித்தொழித்துக்கொண்டிருந் தார்கள். அப்பாடா! ஒரே இரைச்சல்! "நான்தான் போட்டி யில் வென்றேன்" என்று ராஜா ராமன் உரக்க இரைந்தான். 'அது என்ன போட்டி?' என்று மோனத் தவமிருக்கும் மற்ற சிஷ்யர்கள் புரியாமல் மலைத்தார் கள். ராஜாராமன் எழுந்தான்— ஒரு 'குட்டிப்' பிரசங்கம் செய் தான். "எனக்கு உடனே ரோஜாப்பூ மாலை போடுங்கள். இந்த ஹாஸ்டலில் நான்தான் இட்டிலிச் சாம்பியன்! (இதைச் சொல்லும்போது அவன் தன் வயிற்றைத் தடவிக்கொண்டான்) நானும் செந்திலும் ஒரு போட்டி நடத்தியதை நீங்கள் கண்டு களித்தீர்கள்! (களித் தார்களா? அவர்கள் பசி அவர் களுக்குத் தெரியும்) இட் டிலி நாற்பத்தொன்று குழியில் கோலி விழுவது போல என் வயிற்றுள் விழுந்தது. ('எங்கள் வயிற்றில் மண் விழுந்தது' என்று சிலர் முணுமுணுத்தார் கள்) போட்டிக்கு வந்த செந்தில் தோற்றான். அவன் சாப்பிட முடிந்தது நாற்பது இட்டிலி தான்! எனவே, எங்கள் போட் டியை இவ்வளவு நேரம் ரசித்த மஹாஜனங்களே! 'வின்னர்' கப்பை எனக்கு வழங்குங்கள்; மெடல் போடுபவர்களும் தாராள மாகப் போடலாம்."

பிரசங்கம் கரகோஷத்தோடு முடிந்தது. செந்தில் முகத்தில் 'அசடு' வழிந்தது. காலியா யிருந்த இட்டிலிச் சட்டி 'அப் பாடா!' என்று பெருமூச்சு விட்டது. பல மாணவர்கள், டாக் டர் எப்பொழுதோ தங்களுக்கு செய்த உபதேசத்தை நினைத் துக்கொண்டு 'உண்ணாவிரத' மிருந்தார்கள் என்று கூறத் தேவையில்லை. திரை விழுந்தது. கதை முடிந்தது!

* * *

ரசிகர்கள் பலவிதம். 'சோறு கண்டஇடம் சொர்க்கம்' என்னும் பக்த சிரோன்மணிகள் உண்டு. அவர்களைத்தான் "செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள் அவியினும் வாழினும் என்?" என்று மனம் புழுங்கித் திட்டினார் வள்ளுவர். 'அவர்கள் செத்தால் என்ன? இருந்தால் என்ன?' என்று மனமொடிந்து பேசினார். 'சங்கீதம் பரமா னந்தம்' என்று சிறுவன் கையில் ஐஸ் புரூட் உருகுவதுபோல, இசையில் உருகும் ரசிகர்கள், உண்டு. "ஆகா, என்ன அற்புதம்! வெள்ளைக்காரன் தோற்றான் போங்கள்" என்று ஆர்க்காட்டு ராமசாமி முதலியார் பேச்சில் மயங்கும் 'வண்டு'களும் மனித இனத்தில் பறக்கின்றன. 'கண் ணுக்குத் தீனி அழகு' என்று பாரதிதாசன் அடிக்கடி கூறுவ துண்டு. அழகுத் தீனியைச் சோலைமலரொளியிலும் காதலி யின் சுந்தரப் புன்னகையிலும் கண்டு வாரிவாரித் தங்கள் கண் களுக்கு வழங்கும் ரசிகர்கள் கோடானுகோடி! சாக்கடையில்

மொய்க்கும் கொசுக்களை எண்ணினாலும் எண்ணலாம் அவர்களை எண்ண முடியாது. புது மனைவி பின்னும் கைக்குட்டையில் சிரிக்கும் பூக்களைப் பார்த்துப் பூரிக்காத தலைவன் உண்டா?

“அப்பா, பார் நான் போட்ட யானை” என்று தந்தையிடம் ‘சபாஷ்’ பெறத் தான் போட்ட (வி)சித்திரத்தை அவர் முகத்தில் நீட்டும் பிள்ளைக் கனியமுதிடம் அது பூனையா, யானையா, சொல்லால் விளக்கவொண்ணா ஓவியமா என்றுகூடப் பாராமல் ‘பலே’ என்று முதுகில் தட்டி, “உன்னிடம் ரவி வர்மா தோற்றான், போடா” என்று திருவாய் மலர்ந்து களிக்கும் தகப்பன்மார்களை மழைக் காலத்தில் ஈசலைக் காண்பது போல நாம் எப்போதும் கண்டுவரவில்லையா?

ரசிகர்களை வகைப் படுத்தினால் அது பெரிய நிகண்டாகி விடும். புதுச் சங்கதிக்கு வருவோம் சென்னையில் என்னென்னவோ போட்டிகள் நடப்பதுண்டு. சில வாரங்களுக்குமுன் நடந்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிக்கு சென்னை ரசிகர்கள் (சின்னதும் பெரியதும்) கூட்டம் கூட்டமாகச் சென்று மொய்க்கவில்லையா? அதுபோல அழகுப் போட்டி நன்று நடத்தினார்கள் சில ‘கனம்’கள். காசைப் பணமென்று பாராமல் பத்திரிகைகளில் விளம்பரம் செய்து “வாரீர்மாதர்திலகங்களே! அழகுப் போட்டியில் கலந்து களிப்பீரே!” என்று அழைத்தார்கள். பள்ளிக்கூட மாணவிகளெல்லாம் “அழகுப் போட்டி வேண்டாம்! ஆபாசப் போட்டி வேண்டாம்” என்று ஒரு முகக் கூறி எதிர்த்தார்கள். அதைப் பொருட்டாக எண்ணித் தங்கள் ரசிகத்தன்மையை மூட்டை



“சட்டை மிகப் பெரிதாகத் தைத்துவிட்டாயே!”

“எட்டு அவுன்ஸ் ரேஷன் இருந்த போது தைச்சதுங்க அது. ஆறு அவுன்ஸ் இப்பத்தானுங்களே...”

கட்டிவைப்பார்களா, போட்டி நடத்த வந்த புண்ணியவான்கள்! அவர்களின் அழகுத் தெய்வ வழிபாடு இந்தச் 'சுயமரியாதைக்' கூச்சலால் நின்று விடவில்லை. சென்னை அழகியாகச் சூரிய குமாரியைத் தேர்ந் தெடுத்தார்கள் நீதிபதிகள்! கவர்னர் பட்டத்தை வழங்கினர்! கனம் கோபால்ரெட்டி வாசனைப் பொருள்களைச் சமர்ப்பித்தார். ரசிக மஹாஜனங்கள் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்! அழகைக் கண்டு பிடித்துவிட்ட பெருமிதத்தில் தங்களைக் கொலம்பஸுக்குச் சமமாகக் கருதிக் கொண்டு நீதிபதிகள் பூரித்தார்கள். அழகுப் போட்டி 'அடாது மழைபெய்தாலும் விடாது நாடகம் நடைபெறும்!' என்று டிராமாக்காரர்கள் தங்கள் பிட்நோட்டீஸில் அறிவிப்பதுபோல நடந்து முடிந்தது. 'அழகுப் போட்டியா? அவலட்சணப் போட்டியா?' என்று ஒருபத்திரிகை இந்தக் கோலாகலத்தை வர்ணிக்கிறது. 'உலகம் போற போக்கு' என்று நம்மவர்கள்—பண்பாட்டில் நம்பிக்கையுள்ளவர்கள் முணுமுணுக்கிறார்கள். அழகை ரசிக்கலாம்; பெண்ணின் அழகைப் பரமானந்தத்தோடு ரசிக்கலாம்! ஊர்ப் பெண்களின் அழகையல்ல, தனக்கு வாய்த்த பூங்கொடியின் வில் போலும் புருவத்தை, மீனையொத்த கண்ணை, அனிச்சப் பூவின் மென்மையை வெல்லும் அவள் மெல்லியல்பை ரசிக்கலாம்! புகழலாம்! மாடமாளிகை கூட கோபுரங்களைப் போலக் காவியங்களைக்கூட எழுப்பலாம்! யார் வேண்டாம் என்பார்கள்! எதிர்ப்பு மகஜர் ஏன் தயார் பண்ணுகிறார்கள்! "திருந்தாதோ முல்லையெனச் சிரிப்பாள்" என்று 'பாண்டியன் பரிசி'ல் வரும் தலைவன் தன் காதல் கொழுந்தை வர்ணிக்கிறான். இந்த வர்ணனையை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் சில பணம் படைத்த பெருமான்கள், உலகையெல்லாம் கட்டியாள விரும்பும் 'பரந்த மனப்பான்மை' கொண்டவர்கள் நடத்திய அழகுப் போட்டியைப் 'பெண்களுக்கு இழைத்த அநீதி' என்று தான் நாம் கூறமுடியும்! 'இத்தகைய ரசிகமணிகள் நெடுநாள் வாழட்டும்' என்று சபித்துவிட்டு நாம் நிம்மதியடைவோம்! பெண்களின் வீரத்தைப் புகழ்ந்தார்கள்! தியாக உணர்வைப் பூசித்தார்கள்! தாயன்பைப் 'பெரிது பெரிது' என்று போற்றி அகவல் இசைத்தார்கள்! ஔவை மூதாட்டியைக் கல்விப் பெருங்கடலாகக் காட்டினார்கள்! பழைய தமிழ் நூல்களில் இவற்றைக் கண்டு, மனத்தில் நிறுத்தி சென்னைக்கே 'அவமானம்' தேடித் தந்த அவலட்சணப் போட்டியை மறப்போம்!

★

"காங்கிரஸ் மந்திரிசபை கானல் நீர்" போலத் தோற்றமளிக்கும் நிலையிலும் சென்னை சட்டசபைக்குக் காங்கிரஸ் முத்திரை

பெற்று வந்துள்ள வீரர்கள் தலைவராவதற்கு நடத்தும் போட்டியையும் நாம் ரசிக்க வேண்டும். போட்டியிடும் பெரியவர்களையும், தலைவர் பதவிக்காக ஏற்பட்டுள்ள பூசலையும் விவரித்தால், உங்களில் பலருக்குப் பாதாம் அல்வா சாப்பிட்டது போல் இனிக்கும்! ஆனால் நேருவுக்கு கொயினா மாத்திரை போலக் கசக்கிறதாம்! ஓட்டைப் படகில் நின்றுகொண்டு தங்களுக்குள் போட்டி நடத்தும் திருவாளர்களை நம் சென்னையில் தவிர எங்கு காண முடியும்! சென்னை ராஜ்யத்தை ஐந்து ஆண்டுக்குக் கட்டியாளும் ராஜபோகம் சாமானியமா? போட்டி நடக்கட்டும்! அமோகமாக நடக்கட்டும்! ஐந்தாறு பேர் மட்டுமல்ல. நூற்றியைம்பத்திரண்டு பேர்களும் 'நானே ராஜா! நானே மந்திரி!' என்று கும்மாளமிடட்டும்!

காசில்லாமல் கட்டணம் செலுத்தாமல் 'தலைவர் போட்டி'யைக் காணும் சந்தர்ப்பம் வாய்த்ததற்காகச் சென்னை ராஜ்யமக்கள் பூரிக்கிறார்கள்! போட்டி வாழ்க! நீடூழி வாழ்க! ஆல்போல் தழைத்து, அறுகு போல் வேரோடட்டும் இந்தப் போட்டா போட்டி! நாம் ரசிப்போம்! 'வின்னர்' யார் என்று பார்ப்போம்! கை தட்டக் காத்திருப்போம்!

பொய்க் கனவுகள்

டி. ஆர். குருசாமி

"உலகக் கடலே மையானால்
உயர் வானும் தாளானால்
மலைமேல் நின்று எழுதிடுவேன்
மனிதன் யாரோ எழுதுபவன்"

ஆங்கிலக் கவி ஒருவனின் பாட்டு இது. கடல்களில் மை கரைக்க வானத்துத் தாளில் வளமுற எழுதுவானும். இது நடக்குமா? அல்லது நடக்காதா? அதைப்பற்றிக் கவலையில்லை. "ஆஹா! எப்படிப்பட்ட கற்பனை? அற்புதம், அற்புதப்—" ரஸிகன் வியந்து கல்லாகிவிடுகிறான்.

"சந்திரனைப் பிடித்ததனைத்
தமனியம் பண்ணுவேன்"

ஆஹா! கவிஞர் உச்சிக்கே போய்விட்டார் என்கிறார்கள். 'விரிந்த வியனுலகும் பரந்த பாருலகும் மகிழ்வின் மயனுலகாய் மாற்றி விடுங் கவிதை' என்று கவிதைக்கு இலக்கணம் பாடி அந்தக் கவிதையை ரஸிக்கிறான் ரஸிகன்.

...நம் கவிஞரின் பாட்டில் மாங்குயில்கூவும் இன்னிசை கேட்கிறது. தெளிந்த நீரோடையின் சலசலப்புப் புலனாகிறது. பறந்து திரியும் வானம்பாடி, கொத்தித் தின்னும் கோழி, உயர்ந்த மலை, விரியும் மேகம், வெள்ளி ஒளி வெண்ணிலவு, வானத்துப் பட்டில் வரை புள்ளிக்கோலம், பாசம் படர்ந்த பச்சைச் சம்பளத்தில் தலைதூக்கி நிற்கும் தாமரைக்கன்னி, வானத்து இரவியினை வழிபார்த்து வணங்கி வரவேற்கும் சூரியகாந்தப் பெண், இவ்வளவு பேரும் நம் கண்முன்னே காட்சியளிக்கிறார்கள். கவிஞர் நம்மை அங்கெல்லாம் அழைத்துப்போய் விடுகிறார். அவருடனே நாமும் அந்தந்த இடங்களுக்கெல்லாம் போய்விட்டு வந்ததுபோன்ற உள்ள நிறைவு உண்டாகி விடுகிறது என்று ரஸிகன் வளர்த்துக்கொண்டே போகிறான். அவன் இவ்வளவு விஷயங்களையும் அனுபவித்தானா, இல்லையா? கவிதையைப் படித்ததினால் ஏற்பட்ட ரஸிகனின் கனவு அது.



வீதியோடு போய்க்கொண்டிருந்தேன். எதிரே காட்சியளித்தது ஒரு விளம்பரப்பலகை. 'பத்தாயிர ரூபாய் பரிசுபெறப் புதுத்திட்டம். ஒரு நாலணு அனுப்புவதன்மூலம் பெறலாம்' என்று அது கூறிற்று.

...'அனுப்பித்தான் பார்ப்போமே!'...என்றது மனம்.

...'விழுகிறது நமக்கு என்பது என்ன நிச்சயம், ஒரு நாலணு வீணுவதுதான்மிச்சம்..!' நான் எண்ணினேன்.



...ஒருவேளை விழுந்துவிட்டால்....அனுப்பியிருந்தால் விழுந்திருக்கும், என்பதைவிட அனுப்பினேம் விழவில்லை என்ற திருப்தி மேலல்லவா? அனுப்புவோம். சே! விழாமலா இருந்துவிடும். ஒரு ஆயிரமாவது...சே!எண்ணத்தில்கூட அற்பத்தனமா? ஒருவரும் முயற்சி செய்யாமல் நாம் மட்டும் தனியாகப் பரிசு பெற்ருல்...ஆயிரம் சே, பத்தாயிரம் ரூபாய்...என்ன பண்ணுவது?...என், ஏதேனும் 'பிஸினெஸ்' பண்ணலாம். நல்ல திசை இருந்தால், கொள்ளை லாபம் வரலாம். பெரிய வீடு, நல்ல கார், பத்துக்காணி நிலம், ...அடாடாடா அதே விளம்பரத்தைத் தாண்டி எத்தனையோ தூரம்வந்துவிட்டேன். எண்ணத்திலும் தான். விளம்பர உத்தியிலிருந்து கிளம்பி உயரே மூன்ருவது மாடியின் உச்சியில் நிற்கிறேன்.


“சகோதர சகோதரிகளே, வரும் தேர்தலில் நான் உங்கள் மனங் கனிந்த ஒத்துழைப்பினுல் வெற்றிபெற்ருல்...

“நம் மாகாணத்தின் குரல் பார்லிமெண்டில் கணீரென்று கேட்கவைப்பேன். நாட்டின் வளப்பத்திற்கு அசோகனுகிப் பாடுபடுவேன். தனி மனிதனின் உரிமைகள் அத்தனையையும், குடியரசுச் சட்டத்தில் புகுத்திவிடுவேன். அதன் பின்னர் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் இச்சைப்படி நடக்கலாம். அவர்களுக்கு எதுவும் செய்ய உரிமையுண்டு.

“எல்லாரும் எல்லாவித சுதந்திரத்தையும் பெற்றுவிட்டால்.......ஆ ஹா, வானுலகே இங்கு வந்துவிட்டது போலத்தான். கொஞ்சம் கண்ணை மூடிக்கொண்டு அந்த நாளை நினைத்துப் பாருங்கள்...” என்று கூட்டத்தில் உட்கார்ந்திருந்த அத்தனை பேரையும் கனவு உலகத்திற்கு அழைத்துச் சென்று அங்கு ஓடும் பால் ஆறுகள், நெய் மழைகள், உயரமான அரிசிக் குவியல்கள் முதலியவைகளைக் காட்டினுர் அபேட்சகர்

மக்கள் எல்லோரும் அந்தக் கனவின் போதையில் ஒரு கற்பனை நாட்டைச் சிருஷ்டித்துக் கண்டனர். 'திருவாளர்...அவர்கள் ஜயித்தால் நாம் வீதியில் படுத்துக் தூங்கலாம், ரயிலில் டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்யலாம், எத்தனை பச்சை பாஷையில் வேண்டுமானாலும் எழுதும் மஞ்சள் பத்திரிகைகளை, வெள்ளைக் காகிதத்தில் சிவப்பு மையால் அச்சடித்து இளைஞர் உள்ளத்தில் கருப்பைத் தடவலாம்...' என்றெல்லாம் கனவு கண்டனர். அதன் பலன், அபேட்சகரின் சாம்பல் நிறமுள்ள சிறுத்தைவரிப் பெட்டியில் ஓட்டைப்போட்டு நிரப்பினர்.

அபேட்சகரின் பார்லிமெண்டுக் கனவு நடந்தது. கரகோஷமெல்லாம் அடியேனுடைய கைங்கரியந்தான் என்ற அளவில் அபேட்சகருடைய சேவையெல்லாம் நின்று விட்டது. ஆனால், மக்களின் கனவோ? ரயிலில் டிக்கெட்



வாங்காமல் பிரயாணம் செய்தால் குற்றம்; கொலை செய்தால் இன்னும் அதே தூக்குத்தண்டனை; மஞ்சள்பத்திரிக்கைகள் வழக்கம் போலத் தடை செய்யப்பட்டு வந்தன. சே! மனிதனுக்குக் குறைந்தபக்ஷம் கொலை செய்யக் கூடச் சுதந்திரம் இல்லை. மக்களின் கனவு இது.

மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் சண்டை பூசல் இடாமல், கிடைக்கும் ரேஷனுடனே திருப்தியடைந்து, பிளாக் மார்க்கெட்டிங் செய்யாமல், லஞ்சம் வாங்காமல், மதப் பூசலை வளர்க்காமல், மிகவும் உறுதியுடனிருந்தால், இந்த நாடு எத்தனை சுபிட்சமாக இருக்கும். அயல் நாடுகளின் முன்னர் இந்த நாடு இன்னும் எத்தனை தலை நிமிர்வுடன் நிற்கும்? இறக்குமதிகள் குறையும்...சோற்றுக்கு ட்ருமனிடம் தூது அனுப்பவேண்டாம்...நம் நாட்டுப் பொருள்கள் அயல்நாடுகளில் இறங்கி டாலரைச் சேர்க்கும்...அந்த டாலருக்கு...அடாடாடா—! நாட்டுப் பிரதமரின் கனவு இப்படியெல்லாம் நீளுகிறது.........ஆனால் மக்களோ?

"நாம்ப கேக்கற வூட்டுலேயெல்லாம் ஒவ்வொரு பிடிசோறு இல்லேங்காமெ போட்டா இந்தத் தெருவெ நாலு நாளேக்கி நம்பலாம். இந்த ஊரெ ஒரு மாசத்துக்கு நம்பலாம். யாராவது ஒரு புண்ணியவான் வருசத்துக்குஒரு வாட்டி துணி தருமம் பண்ணிப்பிட்டான்னா இந்தக் கட்டை

எப்பிடியும் பொளேச்சிப் போயிடும்."

"சாமி, ரெண்டு நாளாப் பட்டினி... தருமம் பண்ணுங்க சாமி......"

"சே, பிச்சைக்காரக் களுதை காலங்காத்தாலே வந்திட்டியா, போ—போ"

"தாயீ, புண்யவதி கொலே நடுங்குது. பிடிச்ச பிடி சோறு—பளசு கொண்டாந்து போடு, தாயீ தரும தேவதே......"

"ஆமாம் காலேயிலே ஒனக்காவ வடிச்சுப் போட்டுல்ல இருக்குது. வேலெமெனக்கெட்டு காலங்காத்தாலே வந்துட்டானே போடா, போ......"

பிச்சைக்காரனின் கனவு இப்படியாகின்றது.

..."ஏ, நாயே என்னேப் பார்த்து ஏங்கொலேக்கரே? படுபாவிப்பயல் பணத்தெயெல்லாம் புடுங்கிக்கிட்டான்...டேய் நீ மட்டும் பணத்தைக் குடுக்காம இரு, உங்கழுத்தே திருகிப் போட்டுடரேன். அயோக்கியப் பயல். என்னே ஒதைப்பியா? நான்என்னபைத்தியம்ன்னுட்டா நெனச்சுகிட்டே. மோறக் கட்டையெப் பாரு. ஏன் பணத்தைக் குடுடா. அப்புறம் என் இந்த நாய் ராணிமாதிரியல்ல இருக்கும். இந்தச் சோத்தையா போடுவேன்? பாலும் பளமுமல்ல குடுப்பேன். ஏண்டாம்மா உனக்கு இந்தச் சோறு அப்போப் பிடிக்காது. நீதான் ஏன் ஆசைக்கண்ணு. சீ களுதை என்னு மூஞ்சியை நக்கரே? பணக்



காரப்பயவாட்டமா ஏழைமேலே சவாரி விடலாமுன்னு பாத்தியோ? போத்தூ..."

பைத்தியக்காரன் கத்திக் கொண்டே வீதியோடு போய்விட்டான். நாயும் பின்தொடர்ந்தது.

இவ்வளவும் எழுதியாகிவிட்டது. ஒரு நல்ல பத்திரிகைக்கும் அனுப்பியாகிவிட்டது. அடாடா, லட்சத்து நாற்பதினயிரம் வாசகர்கள் கட்டாயம் அந்தக் கட்டுரையைப் படித்திருப்பார்கள். ஒரு நூறு பாராட்டுக்கடிதங்களாவது வராமலா போகும்

'...என்றைக்கு அந்தப் பத்திரிக்கை வெளிவரும்? இன்று என்ன கிழமை. வியாழனு? சரி, கண்டிப்பாய்ப்பிரசுரமாகிவிடும்?' என் கனவு இது.

"ஸார் தபால்"...

ஓடிப்போனேன். கிடைத்தது ஒரு புக்போஸ்ட். பத்திரிக்கை அல்ல; என் கட்டுரை 'பொய்க் கனவு' திரும்பி வந்திருந்தது!


ஊர்க் குருவி

தில்லை-வில்லாளன்

பறவையினத்தில் உயர உயரப் பரந்தாலும், ஊர்க்குருவி பருந்தாகாது என்பார்கள். ஆனால் மனித இனத்தில் சில ஊர்க்குருவிகள் பருந்தாக முயலும் பரிதாபத்தைப் பார்க்கிறோம்.


மரக்கிளையை விட்டுப் பறந்தது ஊர்க்குருவி. பரந்து விரிந்த வான வெளியில் பறப்பதே அதற்கு ஆனந்தமாக இருந்தது. ஆகவே, மகிழ்ச்சி மிகுதியில் விரைந்து விரைந்து பறந்தது. சிறகுகளை விரித்து, விசையுடன் அடித்துக் கொண்டு பறந்தது.

வான வெளியில் வேறு எந்தப் பறவையையும் காணோம். குனிந்து பூமியைப் பார்த்தது. சில மனிதர்கள் கூர்ந்து அதனையே கவனிப்பதுபோலத் தெரிந்தது. அதற்கு ஆச்சரியம் அளவுகடந்து வந்துவிட்டது. தன்னை இப்படி மனிதர்கள் உற்றுப்பார்ப்பதை அன்று தான் முதன் முதல் அறிந்துகொண்டது. களிப்பைத் தாங்கிக்கொள்ளவும் முடியாமல், அப்படி இப்படி ஆடியபடியே பறந்தது. சிறகுகள் சிரமத்தை மறந்தன. பறக்கும் தூரம் கூடத் தெரியவில்லை. தன்னைச் சுற்றிலும் பார்த்தது. நீல வானத்திலிருந்து தொங்குவது போன்ற மேகங்கள்தாம் தெரிந்தன. பறவையினத்தில் ஒரு சிறு பறவையும் பறக்கவில்லை. தன்னையொத்த ஊர்க்குருவிகள்கூடப் பறந்து வரவில்லை. இதனைக் கண்ட ஊர்க்குருவிக்கு உச்சி குளிர்ந்தது. உற்சாகம் பெருகி வழிந்தது. மேலும் பறந்தது.



கண்ணுக்குஎட்டிய தூரத்தில் எதுவும் இல்லைஎன்பதைக் கண்ட ஊர்க்குருவி களித்தது. கொஞ்சம் உயர்த்தியது பார்வையை. அதன் களிப்பு கருகத் தொடங்கிவிட்டது. மிக உயரத்தில் ஒரு பருந்து பறந்துகொண்டிருந்தது. ஊர்க்குருவிக்கு நெஞ்சு உறுத்த ஆரம்பித்துவிட்டது. பருந்தைப் பார்க்கத்தான் மனிதர்கள் சிலர் அண்ணாந்து பார்த்திருக்கின்றனர் என்று எண்ணிற்று. ஏக்கம் பிறந்தது.

பருந்து செல்வது தெரியாமல் கீழே பறந்து சென்றதால்தான் தன்னைப் பார்ப்பது போலத் தெரிந்ததுஎன்பது கணநேரத்தில் புரிந்தவுடன், கண்ணீர் தன்னையறியாமலே சொரியத் தொடங்கிவிட்டது. பறவைகள் எதுவும் பறக்காததற்குக் காரணம் மேலே பறந்துசெல்லும் பருந்துதான் என்பது தெரிந்தவுடன், ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது. அத்துடன் பொறுமையும் பொத்துக் கொண்டு ஓடிற்று.



‘பருந்து பறக்கும்பொழுது பக்கத்தில் சென்றால்தான் எனக்குப் பாராட்டா, மதிப்பா,’ என்று எண்ணமிடத் தொடங்கிவிட்டது. அன்று அதன் மனதில் புகுந்த எண்ணம் அதன் நெஞ்சைத் தினந்தினம் கொஞ்சம் கொஞ்சமாகக் குடையத் தொடங்கிவிட்டது.

‘பருந்தும் பறவைதான். நானும் பறவைதான். ஏன் எனக்கில்லை, அந்தப் பாராட்டு—பயபக்தி—விசுவாசம்!’ அந்தக் கேள்விதான் அந்த ஊர்க்குருவியை உருக்குலைத்து வந்தது.

பருந்துக்கு வரும் சிறப்புகள் தனக்கும் வரவேண்டும். அதற்கு என்னென்ன செய்யவேண்டும் என்று யோசித்தது.

பருந்தாகப் பகீரதப் பிரயத்தனம் செய்யத் தொடங்கிவிட்டது ஊர்க்குருவி.

மூக்கைச் சுளித்துக்கொண்டு பறந்தது ஒருநாள். வைக்கோல் புரிகளால் வீங்கிய தலையாகப் பறந்தது மற்றொருநாள். பருந்து எப்படி, இரைதேடுமோ, அது போல் இதுவும் நடித்தது. பருந்து எந்தமரத்தில் தங்குமோ அங்கேயே தங்கிற்று.

ஊர்க்குருவி பருந்தாக மாறிவிடப் படாதபாடுபட்டது. ஊர்க்குருவிகள் எல்லாம் சேர்ந்து சிரித்தன. அப்பொழுதுகூட அதற்குப் புத்தி வரவில்லை.

பருந்தாக, தான் கடைப்பிடிக்கும் முறைகளே சரியானவையென்று, அதன்படியே நடந்தது. பறவை இனமே, இந்தப் பரிதாபத்திற்குரிய ஊர்க்குருவிக்கு அனுதாபம் தெரிவித்தது.

இந்த வீணுக்கு வேடங்கட்டிப் பாழாகும் ஊர்க்குருவியின் கதை, பருந்துக்குத் தெரியாமலே இருந்தது, பலநாட்கள். ஒருநாள் தெரிந்து விட்டது. அதனைப் பார்க்கிறபொழுதெல்லாம் பரிதாபமாகவும் இருந்தது. சிரிப்பாகவும் இருந்தது. ஒருநாள் பருந்து, ஊர்க்குருவியை

அழைத்து உண்மையைக் கூறிற்று. "ஊர்க்குருவிகளுக்குள், உயர்ந்த குருவியாக முயற்சி செய். அது தான் முடியும். உன்னுல், பருந்தும் ஆகலாம். உருவத்தாலல்ல — செயலால்! அதற்கு இப்பொழுது போடுகிற போலி வேடமல்ல மார்க்கம்— பொய்க் கௌரவமல்ல வழி— அதற்கு வேறு பாதை காட்டுகிறேன்" என்று கூறிற்று.

ஊர்க்குருவி 'திருதிரு' வென விழித்தது.

"உயரமாகப் பறக்கிறேன்; ஊரார் உற்றுப்பார்க்கின்றனர். உடன் பிறந்த பறவைகளால் அவ்வளவு உயரம் பறக்க முடியவில்லை" என்று கடைசியாகக் கூறிற்று. கடைசியாக ஊர்க்குருவி தலையைத் தொங்கவிட்டுக் கொண்டே வந்தது. இந்தக் காட்சியை மற்ற ஊர்க்குருவிகள் எல்லாம் சேர்ந்து பார்த்தன. "உயர உயரப் பறந்தாலும், ஊர்க்குருவி பருந்தாகுமா?" என்று அவை இறக்கைகளை அடித்தபடியே கூவின.

ஓலம்

தமிழேந்தி

ஜங்காரி!

இந்தப் பேர்—இந்தப் பேருக்கான ஊர்—ஊரைச் சூழ்ந்த சீர்—எல்லாமே பயங்கரம். மகா பயங்கரம்!

செக்கர் வண்ணம் பாய்ந்தூறிக் கிடக்கும் அந்தப் பிரதேசத்தின் மண் வளந்தானே? ஜங்காரிவாசிகளின் மனவளந்தானே? அல்லது, அங்கே நெருங்கிக் கிடக்கும் இந்து—இஸ்லாமிய மதங்களின் நாயும் பூனையும்போன்ற தன்மை தானே?

என்ன பாவமோ?...

அது, அராஜகத்தின் இருப்பிடம்!

இப்படிப்பட்ட ஜங்காரியிலே நம்முடைய கதைக்கு வேண்டிய இரண்டு சகோதரர்கள் பரம்பரையாக வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் இஸ்லாமியர்கள். அவர்கள் இருவரும் தத்தம் மனைவி மக்களுடன் ஒரே குடும்பமாக அன்பு கனிய வாழ்ந்து வந்தார்கள்.

அண்ணன் முகம்மது அலிக்கு ஏழு வயதுப் பையன் ஒருவன் இருந்தான். நல்ல அழகன். பெயர் ஷம்ஷுத்தீன்.

தம்பி சையதுக்கு நாலுவயதுப் பெண் இருந்தாள். தவள நிறப் பவளப் பதுமைதான். அவள் பெயர் ஆயிஷா.

சகோதரர்கள் இருவருக்கும் ஓர் ஆசை. தங்களின் தங்கக் குழந்தைகளுக்குத் தக்க பருவம் ஆனதும், தம்பதிகளாக்கிக் காண வேண்டுமென்று அவர்கள் காலத்தை மிக ஆவலோடு எதிர் பார்த்துக் கிடந்தார்கள்.

காலம் கரைந்துகொண்டே வந்தது.

திடீரென்று ஒருநாள்!

ஜங்காரிக்குப் பஞ்சம் வந்தது. அத்துடன் பல இன நோய்களும் வந்தன. இது போதாதென்று, புகைந்து கருகிக்கொண்டிருந்த மதவெடியும் படீரென்று வெடித்தது!

போர். போர்தான்!

அராஜகம்!

கொள்ளை! கொலை! குமுறல்!

செந்நீர் வெள்ளம்! செந்தீயின் ஜ்வாலை!

ஒரே அல்லோல கல்லோலம்!

அண்ணன் பலி! அவன் மனைவி நிறையழிக்கப்பட்டு மாண்டாள்! ஆனால், தம்பி சையது...

அவன் தப்பித்துக்கொண்டான்!

அவர்கள் மக்கள்...?

அவர்களிடம் வேலைபார்த்து வந்த ஒரு கிழவன், ஷம்ஷுத்தீனைத் தூக்கிக்கொண்டு எப்படியோ உயிர்பிழைத்து எங்கேயோ ஓடிப்போனான்.

ஆயிஷா எதிர்வீட்டுக் கிழவி ஒருத்தியால் காப்பாற்றப் பட்டாள்.

இவ்வளவு போதும். கதை யைத் திருப்பிவிடலாம்.

சேலத்தில் சோனா. மானா. செட்டியார் ஒருவர். அவர் திரைப்படத் தொழிலில் மகா நிபுணர். அவரிடம் தத்துப் பிள்ளையாக வளர்ந்தான் ஷம்ஷுத்தின். இப்போது அவன் பெயர் ஷம்ஷுத்தினும் அல்ல; அவன் முகம்மதியனும் அல்ல. அவன் இந்து. பெயர்—சுந்தரம்.

அவனும் சந்தித்தார்கள். பேசினார்கள், கண்ணால்கூட.

அவள் அந்தப் படத்தில் நடித்து முடித்தாள். படம் வெளியாவதற்குள் சுந்தரி என்ற அந்தப் பெண்ணுக்கும், சுந்தரத்திற்கும் திருமணம் நடந்து முடிந்தது. அவள் யாரென்று நினைக்கிறீர்கள்? எதிர்வீட்டுக் கிழவியால் காப்பாற்றப்பட்ட ஆயிஷாதான்!



சுந்தரம், ஸ்டுடியோவிற்குக் கிளம்பினான். ஒரு நல்ல சந்திப்பு ஏற்பட்டது.

புதிதாக நடிக்க வந்திருந்தாள் ஒரு பெண். பேரழகி. அவளும்

புதிய தம்பதிகள் குதூகல வாழ்க்கையை ஆரம்பித்தார்கள்.

ஒருநாள் அவனும், அவளும், தங்கள் செல்லத்

திருவுடன் கொஞ்சிக் கொண்டிருந்த சமயம், ஒரு பரதேசி வந்தான்.

பிச்சை கேட்க வாயைத் திறந்தவன், திறந்தபடியே திடுக்கிட்டு நின்றான்.

அவனுக்கு அவர்களைத் தெரிந்துவிட்டது! அவன் குதூகலமாகக் கூத்தாடினான்!

அவன் யார்?

தம்பி, சையது!

"ஏ...அல்லா!... எங்கள் ஆசையைத் தீர்த்து வைத்த உமக்கு......இந்தப் பரதேசியால் என்ன செய்ய இயலும்? ஆ...அல்லா! அல்லா...!"

பரதேசி சையது பரமானந்தக் கும்மாளியிட்டான்! மீண்டும் அவர்களைக் கவனித்தான்.

"ஆ, அல்லா!...என்ன இது? என் அருமை மகள் ஆயிஷாவின் அழகு நெற்றியில் ஏதோ சிவப்புப் புள்ளி......குங்குமப் பொட்டா? ஐயோ! அடப் பாவி அல்லாவே! அட, உறவு தெரியாத அல்லாவே — உலகம் தெரியாத அல்லாவே! இஸ்லாமிய சமுதாய சட்டத்திட்டப்படி, என் அண்ணன் மகனான ஷம்ஷூத்தீனுக்கும், என் மகளான ஆயிஷாவுக்கும் 'நிக்கா' பண்ணி வைக்கலாம். ஆனால்... இந்து சமுதாயச் சட்டப்படி...அடப் பாழாய்ப்போன அல்லாவே! அவர்கள் இருவரும் சகோதர சகோதரிகளாயிற்றேடா பாவி! ஐயோ, இப்படியுமான அக்கிரமமா...!"



பரதேசி மத ஓலமிட்டுக் கொண்டே ஓடினான். சற்று நேரத்திற்குள்ளே அவன் ஓலம், பாரத கடலின் அடித்தளத்தில்போய் அழுந்தியது!

அவனுடைய இந்த ஓலத்திற்குக் காரணம்—மனமா? அல்லது, மதமா?

நினைவின் விளைவிலே!

எஸ். ஆறுமுகம்

“கொலையைப்பற்றி நீங்கள் சற்றுமுன் சொல்லிக்கொண்டிருந்தீர்களே, அது என்ன?” என்றாள் திருமதி செஸ்வார்டின், கையில் ஏந்திய உணவுத் தட்டுடன் ஒய்வறைக்குள் நுழைந்தபோது.

“அதை அப்படியே வை” என்றான் அவள் கணவன், அங்கிருந்த சிறு மேஜையைச் சுட்டிக் காட்டி.

“இந்த மேலணி உனக்கு எடுப்பாக இருக்கிறதே” என்று முணுமுணுத்தான் உட்ராப்— அக்குடும்பத்தின் தோழன் அவன்.

உண்மையிலேயே அவள் அணிந்திருந்த மேலணி மிகவும் கச்சிதமாகத்தான் இருந்தது. இதில் அவளுக்கு மிகவும் திருப்தி. அவள் புன்னகை செய்தாள். அவளை அவள் கணவன் ‘வேரா’ என்று செல்லமாக அழைத்தான். வழியில் கண்டதும் கனிந்த காதலுறவில் அவளைக் கைப்பிடித்தான் செஸ்வார்டின். அவள் அவனுடன் நாள் முழுதும் ஒட்டிக் கொண்டிருப்பாள். அவனை அவள் அலங்கரித்தாள்; அன்பு பாராட்டினாள்; ஆனந்தப் படுத்தினாள்.

உட்ராப் இம்மாதிரி இரவுச் சாப்பாடுகளில் தம்பதிகள் இடையே கலந்துகொள்வான். வேராவுக்குஇந்தநட்புத் தொடர்பு மனதிற்கு ஏற்றிருந்தது.

“கொலையைக் குறித்து நீங்கள் என்ன சொல்லிக் கொண்டிருந்தீர்கள் என்று கேட்டேன்” என்றாள் வேரா, கணவனை நினைவூட்டும் நோக்கம் கொண்டு.

“ஓ, நீ கேட்டாயா?...கொலை! அது தோன்றுவது போல அப்படியொன்றும் நடக்க முடியாத செயலல்ல என்பதைச் சொல்லிக் கொண்டிருந்தேன். யாரும் ஒரு கொலையைச் செய்து விடலாம்” என்றான் உட்ராப்.

“அப்படியென்றால் நீங்கள் ஹாரிஸ்போர்டை ஆதரிக்கிறீர்களா?” என்று கேட்டாள் அவன் துணைவி.

அப்பொழுது பிரசித்தமான ஹாரிஸ்போர்டின் கொலைகள் நகரத்தை ஆட்டிப்படைத்து வந்தன. மக்கள் அவைபற்றிச் செய்தித்தாளில் படித்தனர்; அவை அவர்கள் பேச்சில் இடம் பெற்றன. கனவுகளுங்கூட கொலை குறித்ததாகவே அமைந்தன.

“அப்படியொன்றும் அவன் ஹாரிஸ்போர்டை ஆதரிக்கவில்லை” என்று இடைமறித்த செஸ்வார்டின், அதே குரலில் “ஆனால் நிஜமாகவே ஒருவன் தாராளமாகக் கொலைசெய்ய முடியும். நான் செய்வேன்” என்று நிறுத்தினான்.

"எவ்வளவு பயங்கரமான செய்தி!" என்றாள் வேரா.

"நீ கூடச் செய்யலாம்" என்றான் உட்ராப்.

"ஐயோ, அந்த ரத்தம்..."

"எப்போதும் ரத்தம் இருக்கும் என்பதில்லை" என்றான் அவள் கணவன்.

"கேள். சைனாவிலுள்ள ஒரு பணக்காரனைச் சாகடிக்க வேண்டுமென்று ஒரு ஆங்கிலேயன் மனதில் எண்ணினால் அதன்படி சினப் பணக்காரன் இறந்துவிட, அதே போதில் அந்த ஆங்கிலேயன். சினாக்காரனின் எல்லாச் சொத்துக்களையும் யாரும் எதையும் அறியாமல் பெற்றுவிட முடியும்."

"அது மிகவும் தவறு"

வேரா மறுத்தாள். வாழ்வை விசித்திர நோக்கில் வைத்துப் பார்ப்பதை அவள் வெறுத்தாள். அப்படி நினைக்கக்கூட அவள் மனம் இடந்தரவில்லை.

"தவறல்ல அது. ஒரே மூச்சில் நடக்கும் பலப் பல கொலைகளைத் தடுக்க ஒரு வழி..." என்றான் உட்ராப் தணிந்த குரலில்.

"நம்ப முடியாது. ஆனால் நினைத்தமாத்திரத்தில் ஒருஆங்கிலேயன் எங்ஙனம் சினப் பணக்காரனைக் கொல்லக்கூடும்?"

"சென்ற வாரம் 'எண்ண மாற்றம்' பற்றிச்சொன்னதை நீ மறந்துவிட்டாயா? அப்படி மேலைநாட்டில் நடந்திருக்கிறதே..."

"அது ரொம்பவும் அருவருக்கத்தக்கது" என்று ஆணித்தரமாக மறுத்தாள் வேரா.

2

பெண்கள் ஹாக்கி கிளப்பில் அன்று ஓர் விருந்து நடக்கவிருந்தது. வேராவும் அதில் அங்கத்தினர். விருந்துக்கென அழகிய தொருமேலணியை வாங்கியிருந்தாள். அது அவள் உடலுக்கு மிகப் பொருந்தியிருந்தது. அத்துடன் அவள் அழகையும் அதிகப்படுத்தியது. ஆனால் அந்த மேலணிக்கு ஒரு ஒட்டியாணம் மாத்திரம் இருந்தால் அதன் எழிலே தனிதான். ஆனால் அது அவள் வசம் இல்லை. ஒரு கினி பெறுமான முள்ளதுதான் அது. என்றாலும் அப்போது அவளிடம் பணம் இல்லை. கணவனிடம் சென்று கேட்கவும் அவள் விரும்பவில்லை. பெரிய உத்தியோகம் வகிப்பவன் அவன். அடிக்கடி பணத்திற்குத் தொந்தரவு கொடுக்கலாமா? ஒரு கினி இல்லாததால், அவளுக்கு உலகமே வெறிச்சிட்டிருந்தது. இரவு முழுதும் அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. வேலைக்காரர்கள் ஒரு மூலையில் உறங்கினார்கள். அறையில் குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்த தன் கணவனைப் பார்த்தாள் அவள். மேல் தட்டில் 'சாம்பெயின்' பானம் இருந்தது; ஒய்வறையில் பியானோ இருந்தது; லாயத்தில் குதிரைகள் கட்டிக் கிடந்தன; அவளிடம் வாழ்வும் வளமும் இருந்தது. எனினும்,

ஒரு கினி அவளுக்கு அப்போது இல்லாத குறை, அவளுக்கு உலகத்தைச் சூன்யகோளமாக்கி விட்டிருந்தது. அவள் நெட்டுயிர்த்தாள்; நெடுமூச்செறிந்தாள்.

அக்கணத்தில் அவளுக்கு சற்றுமுன் தன் கணவன்—அவன் நண்பன் இவர்களிடையே நடந்த 'கொலை' பற்றியவாதங்கள் நினைவிலெழுந்தன. சின ஆபீஸர்களைப்பற்றி ஒடியது அவள் சிந்தனை. எண்ணத்தின் விளைவில் கொலையா? பயம் ஆட்டியது உயிரை. சோதிப்பதற்கரிய சாதனைகள் உலகிலே நடக்கின்றனவா, நடக்கமுடியுமா? அவள் நடுங்கிப்போனாள். நடந்த சம்பாஷணையின் ஒவ்வொரு வார்த்தையும் எதிரொலித்தது.

திடீரென்று அவள் கணவனின் பணம் குலுங்கும் பர்சைப் பற்றி எண்ணினாள். அவள் அதைத்தொடக்கூடாது. மேலும்



"வேரா, உன் அறை மேஜை டிராயரில் ஒரு சவரன் நான் வைத்திருந்தேனே நீ எடுத்தாயா?"

அவன் எழுந்திருந்து விடுவான்.

மீண்டும் சீனநாட்டு அலுவலகக்காரர்களைப்பற்றிச் சிந்திக்கலானாள். அவர்கள் மிகவும் கருமிகளென்றும் அறிந்திருந்தாள். ஏழைகளின் கண்ணீரால் பணக்காரர்களாயினர் என்பதும் அவளுக்குப் புரிந்தது. ஆங்கிலேயர்கள் பிரவேசிக்க இயலாத சீனாவின் கோடி எல்லையில் நின்றது அவள் எண்ணம். அங்கு யாருடைய சாவு அப்பகுதிக்கு ஓர் இனிய முடிவாக இருக்குமோ, அதுவே அந்த நாட்டிற்குத் தான்செய்யும் நன்மையாகக் கருதப்படுமோ, அந்த ஒருவனை நினைத்தாள். மனைவி, குடும்பமற்ற திருமணமாகாத ஒருவன், அல்லது கிட்டத்தட்ட இறக்கும் நிலையிலுள்ள படுகிழவன் ஒருவன்—அந்த ஒருவனைப்பற்றி நினைத்தாள் வேரா. ஆக, அவளுக்கு அந்த ஒரு சீன ஆபீஸரது பணம் கிடைக்கவேண்டும் — அதுவும் ஒரு கினி — ஆம்; அன்று நடக்கவிருக்கும் விருந்தில் தன் மேலணிக்கு அழகுக்கு அழகு செய்யவல்ல ஓர் ஒட்டியாணம் வாங்குவதற்குத் தான்! அந்த ஒருவன் இறந்துபட அவள் விரும்பினாள். அவளுக்கு நடுக்கமெடுத்தது.

3

விடிந்தது.

—அவள் கணவன் சீக்கிரமே எழுந்து வேலைகளில் ஈடுபட்டிருந்தான். அவள் படுக்கையை நீங்கி எழுந்தாள். தன்னைப் போன்ற ஒரு மனிதப் பிறவியை அநியாயமாகச் சாக நினைத்ததற்கு அவள் வருத்தமுறவில்லை. ஒருகால் பகல்போதிலே அந்த மாயமருந்து வேலை செய்யாதோ என்றுதான் அவள் வருந்தினாள். செஸ்வர்டின் கொள்கை நிருபணங்கள் உண்மையிலேயே காரணமற்றும், இயற்கைக்கு ஒவ்வாதவையாகவுமேஇருந்தன. அல்ல! அவளுக்கு எப்படியும் ஒருகினி தேவை! அப்பொழுதுதான் அவள் விருந்தில் கலந்துகொள்ள வாய்ப்புக் கிடைக்கும்.

உடை அறை மேஜை டிராயரைத் திறந்தாள். 'என்ன ஆச்சரியம்! அங்கே ஒரு சவரன் இருந்தது! அதே வினாடி, இரவு சீன ஆபீஸரைச்சாகடிக்க அவள் நினைத்த எண்ணம் நினைவோடியது. சே, என்ன தப்பான அபிப்பிராயம்! சந்தர்ப்பங்கள் சங்கமித்திருக்கின்றன; அவ்வளவுதான். யாரோ மறந்து இந்தச் சவரனை வைத்துவிட்டிருக்கின்றனர்!

சவரனை எடுத்தாள்; ஏசுவுக்கு நன்றி கூறினாள்; கடைத் தெருவுக்குப் புறப்பட்டாள்; வெள்ளி ஒட்டியாணம் வாங்கித் திரும்பினாள். வழியில், அன்றைய தினச்செய்தியில் 'சீனத்தலைவர் ஷிஹங்சாங் இன்று விடியற்காலையில் இறந்து போனார்' என்றிருந்ததை அவள் படித்தாள்.

4

வேராவின் தலை கனத்திருந்தது. அவள் சோபாவில் சாய்ந்திருந்தாள். நலக்குறைவுடன் விருந்துக்குப்போவது நன்றல்ல

வென்று அவளுக்குப் புத்தி சொன்னான் அவள் கணவன் செஸ்வார்டின்.

'என்ன விசித்திரம் இது. நம்பக் கூடாத ரகசியமா இது? எப்படி இது நேர்ந்ததோ? நான் எண்ணியதன் விளைவுதானோ, தலைவரின் சாவு......பயங்கரம், பாவம், பரிதாபம்......'

சீனத் தலைவரின் மரணம் அவள் மனதை மடியச் செய்து கொண்டிருந்தது. அவள் பங்கில் இத்தகைய விபத்து நேரு மென்று அவள் சற்றும் எதிர் பார்த்தவளல்ல. ஏன் அன்று அவள் கணவன் கொலைபற்றி விவரித்தான்? நெருப்புடன் விளையாட அவனுக்கு உரிமை இல்லை. எல்லாம் விளைந்தது அந்த ஒரு ஒட்டியாணத்தினால் தானே...அந்தோ!

மருந்தெடுத்து நெற்றியில் தடவினாள் வேரா. விளக் கொளியில் ஒட்டியாணம் கிடந் தது. அது லீயின் விலையோ! அதை எடுத்து நெருப்பில் வீசி விடத் துடித்தாள் பெண். ஒரு சவரன் பணத்துக்கு, சீனத்துத் தலைவர் ஒருவரைப் பலியிடுவ தென்றால் ...... சீனாவினின் றும் அரியதலைவரொருவரைப்பிரித்து விடுவதென்றால்...

ஆனால் அவள் விரும்பியது ஒட்டியாணம் ஒன்று மாத்திரம் தான். அதைவிட அதிகப்படி யாக எதையும் அவள் விரும்பின வளில்லை. அவளுக்கு ஒட்டி யாணத்தின்மீது ஆசை விழுந் திருந்தது.

அன்று வீட்டில் நடந்த சம் பாஷணை, இரண்டுமணி நேரத் திற்குள் நேர்ந்த லீயின் மரணம், சற்றுமுன் அவளுக்குக் கிடைத்த திடீர் அதிஷ்டம்— எல்லாம் சடுதியில் ஓடின அவள் இதயத்தில்.

"வேரா, உன் அறை மேஜை டிராயரில் ஒரு சவரன் நான் வைத்திருந்தேன். நீ எடுத் தாயா?" என்றான் அவள் புருஷன்.

"இல்லை" என்று பதில் சொன்னாள் வேரா, கணமும், யோசித்துக்கூடப் பார்க்காமல்.

"ஆ, அப்படியா?" என்ற வாறே கதவைப் படீரென்று சாத்திவிட்டு நகர்ந்தான் செஸ் வார்டின், தன் காதலியின் தலை நோவைக்கூடப் பாராமல்.

வேரா விளக்கேற்றினாள். தலைவலி நின்றிருந்தது. பழைய நினைவுகளைக் கூட்டிப்பார்த்தாள்.

அப்பொழுது சார்லி அங்கு தோன்றினான்.

"உங்கள் கணவர் போன் பேசினார். உடல் நலமில்லை யென்றால் இன்று நடனத்திற் குப் போகாமலிருங்கள். உடம்பு எப்படியிருக்கிறது? டாக்டரை வரவழைக்கட்டுமா?" என்றான் அவன்.

அவள் விளக்கொளியின் முன் நின்றாள், கீழே கிடந்த ஒட்டி யாணப் பார்சலை வந்தவன் பார்த்து விடாமலிருக்க.

"உடம்புக்கு ஒன்றுமில்லை. தலைவலி, அதுவும் சரிப்பட்டு விட்டது."

"சந்தோஷம்."

"நேற்று நாம் சின உத்தியோகஸ்தர்களைக் கொலைசெய்வதுபற்றிச் சர்ச்சை செய்து கொண்டிருந்தோமல்லவா? அதன் பிறகு இரவில் பாவம், லிஹங்சாங் இறந்துவிட்டிருக்கிறார்" என்றாள் திருமதி வேரா.

"ஆம்; நாம் அதுபற்றிச் சம்பாஷித்துக் கொண்டிருந்ததற்குப் பிறகு லி சாகவில்லை. அதற்கு முன்னால் அவர் செத்து விட்டார்."

"காலை இரண்டுமணிக்கு இறந்ததாகப் பத்திரிகையில் படித்தேன்"

"காலை இரண்டு என்பது பீகிங்கில். நம் மணியளவுக்குப் பீகிங்மணி அளவு அநேக மணி நேரங்கள்முந்தியதாகும்... அது கீழ்த்திசைக் கோடியில் கிடக்கிறது."

"ஆ—அப்படியா?" என்று அதிசயித்தாள் வேரா.

அந்தச் சமயம் அவள் கணவன் செஸ்வர்டின் ஓடிவந்தான். சார்லியைப் பார்த்ததும் "ஓ, நீயா?" என்றான்.

"அவள் உடம்புக்கு எதுவுமில்லைபோலும். விருந்தில் நடனமாடப் போகிறாள் வேரா, இல்லையா?" என்றான் சார்லி அவளைப் பார்த்துப் புன்னகை புரிந்தவாறு.

"வேரா, காலையில் உன் மேஜை டிராயரில் ஒரு சவரன் வைத்திருந்தேன். காணவில்லை. முன்னமேயே சந்தேகித்தேன் நம் வீட்டு வேலைக்காரப் பெண்ணை. அவள்தான் எடுத்துவிட்டிருக்கிறாள்..." என்றான் அவள் கணவன் செஸ்வர்டின் பதட்டத்துடன்.

"வேலைக்காரிமீது பழி சுமத்தாதீர்கள். நான்தான் அந்தச் சவரனை எடுத்தேன்."

"சற்றுமுன் நீ எடுக்கவில்லையென்று சொன்னாயே, எதற்காக?"

"அப்பொழுது உங்களுடன் விவாதிக்க என் உடல் நிலை இடமளிக்கவில்லை."

"இப்பொழுது நிலை சரியாகிவிட்டதாக்கும். மகிழ்ச்சி" என்றான் அவள் துணைவன் பரிகாசச் சிரிப்புடன்.

அன்று நடக்க இருக்கும் விருந்துக்கு டவுன் ஹாலுக்கு வேரா, அவள் கணவன், சார்லி, இளைய சகோதரி எல்லோரும் சென்றார்கள். வேரா மேலணியில் அணிந்திருந்த அந்த ஒட்டியாணத்தைப் புகழாதவர்கள் அன்று யாருமில்லை. காம் பற்றிய கணவனால் இதய பூர்வமாகக் காதலிக்கப்பட்டுவரும் பாக்கியம் பெற்ற திருமதி வேராவைப்பற்றித்தான் அன்று எல்லோரும் வியந்து பாராட்டினார்கள்.

"தவறான மூட நம்பிக்கைகள்! நினைவின் விளைவிலே கொலையா? ஊஹூம், நான் நிஜமாகவே அதை நம்பவேயில்லை" என்று தனக்குள் கூறிக் கொண்டாள் வேரா. அவள் பார்வை உடலில் ஒட்டிநின்ற ஒட்டியாணத்தின் அழகில் இழைந்திருந்தது!

[மூலம் : ஆர்னல்ட் பென்னெட்]

முதற் பணி

இராம. பழனிச்சாமி

அகில உலகிலும் இன்று அமரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகள், சீரும் சிறப்புமுற்று எழிலுடன் விளங்குகின்றனவென்றால் அதன் காரணமும், அடிப்படையும், அந்நாடுகளிலுள்ள கிராமாந்திரங்களின் முன்னேற்றமேயாகும். ஏனைய நாடுகளை விட, தமிழ்நாடு கிராமங்களை அதிகமாய் உடையது. கிராமங்கள்தாம் நம் நாட்டின் உயிர்நாடி. இவைகளையெல்லாம் நன்கு உணர்ந்து, சிந்தித்துத்தான், காந்தியார் போன்ற உலகப்பெரியார்கள், கிராமாந்திரங்களின் முன்னேற்றமே ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு இன்றியமையாதெனக் கழறிப்போந்தனர். பிற நாடுகளிலே அம்மாதிரிக் கிராமங்களை அரசினர் முன்னேற்றப் பாதையில் நடத்திச்சென்றனர். இங்கோ, கிராமங்கள் நாட்டின் உயிர்நாடி என்று நகரத்தில் பேசுவர். கிராம சீர்திருத்தத்திற்குப் பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றுவார்கள். விஞ்ஞான முறையில் அண்டை நாடுகளில் பயிர் செய்யப்படுகிறது எனப் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் வெளிவரும். யாருக்கு? எல்லாம் நகரவாசிகளுக்குப் பயன்படும் முறையில்தான் கிராமங்கள் முன்னேற வேண்டுமானால், அங்குள்ள ஏழை மக்கள் முன்னேற வேண்டும். அவர்கள் முன்னேற வேண்டுமானால், அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும்.

ஒவ்வொரு பாட்டாளியின் நிலையினால் நாட்டில் நல்வளம் குன்றிவிடும் என்பதிலும் இப்பொழுது குன்றி வருகிறது என்பதிலும் எத்துணையும் ஐயமில்லை. வருந்தத்தக்க நிலையில்தான் நம் நாட்டில் கிராமங்கள் இருக்கின்றன. அப்படி யாவதற்குக் காரணம் கிராமங்களில் பண முதலாளிகள் அதிகம் இருக்க இயலாது, கண்ணுக்கெட்டிய தூரம் நிலங்களைச் சொந்தமாக்கிக்கொண்டு காட்டரசர் போல் வாழும் நில முதலாளிகள்தான் இருக்க இயலும். பண முதலாளித்துவத்தை விட நில முதலாளித்துவம் மிகவும் கொடிது. பணமுதலாளிகள் நகரங்களில் ஆலை இன்னும் அநேகவிதமான நூதன தொழிற்சாலைகள் வைத்து நடத்துகின்றனர். அத்தொழிற்சாலைகளில் ஏராளமான பாட்டாளிகள் குவிந்து பணியாற்றுகின்றனர். அதனால் உழைக்கும் மக்கள் கூட்டம் ஒன்று சேர வாய்ப்பும் வசதியும் இருக்கிறது.

இந்த நிலை உழும் பாட்டாளிக்குக் கிடையாது. காரணம் அவர்கள் பிரிந்து பிரிந்துதான் வேலை பார்க்கவேண்டியிருக்கிறது. இந்த நிலையில் நில முத

லாளிகள் நில உழைப்பாளிகளை எய்த்துப் பருக்கின்றனர். கிராமம் முன்னேறவேண்டுமானால்—ஏன், இந்த நாடே முன்னேற வேண்டுமானால் உழவர்கள் ஒன்றுசேர்ந்து உழைக்கத் திட்டம் வேண்டும். உழைத்து உழைத்து உருக்குலைந்துகன்னங்கள் ஒட்டி, கருத்திழந்து என்புந்தோலுமாய் பார்க்கச் சகியாது நிற்கும் பாட்டாளி வலிமையும் வன்மையும் உடையவனாய் ஆக வேண்டும்.

அடுத்து நிலங்களை நூதன விஞ்ஞான முறையில் பயிர் செய்யவேண்டும் என்றும், தரிசு போடக்கூடாதென்றும், அதனால் இவ்வளவு கெடுதி இருக்கிறதென்றும், அதனால் மக்களுக்கு விளையும் இன்னல்களையும் எடுத்துரைக்கவேண்டும். யாருக்கு? நகரத்திலே உள்ளவர்களுக்கல்ல. யார் உழைக்கிறார்களோ அவர்களிடத்தில். நடுத்தர விவசாயிகளிடத்திலும் பேசவேண்டும். உணவுப் பொருள் அபிவிருத்திக்கு வேண்டியது உரம். உரமின்றேல் உணவு இல்லை. தற்போது விவசாயிக்கு வேண்டிய உரம் கிடைப்பதில்லை. அதைக் கறுப்புக் கடையிலே வாங்க வேண்டிய நிலையிலிருக்கிறது. உரம் மாத்திரமென்ன? மற்றெல்லா விவசாயத் தேவைகளும் கறுப்புச் சந்தையில்தான் வாங்கவேண்டியிருக்கிறது. விளைந்தவுடனே உணவுப் பொருள் பங்கீட்டு அலுவலர் வந்து மொத்த வியாபாரியிடம் அரசினர் ஆக்கும் விலைக்கு வாங்கச் செய்கின்றனர். அன்று உரம் வாங்கும்போது உயர்ந்த விலை; உணவுப்பொருள் விற்கும் போது குறைந்தவிலை! இந்த நஷ்டம் ஏற்படாதவாறு சர்க்கார் திட்டம் வகுக்கவேண்டும். உழவர்களுக்கு ஏமாற்றத்தை உண்டு பண்ணாது, உற்சாக மூட்ட வேண்டியது சர்க்காரின் கடமை.

நூதன முறையில் விவசாயம் செய்யவேண்டும் என்பதை மக்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும். அதற்கு உயர்ந்த சாதனம் ரேடியோதான். ஆகையால் ஒவ்வொரு ஊரின் பொது விடங்களில் ஒவ்வொரு ரேடியோ நிறுவி, அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளில் இப்படியிப்படிப் பயிர் செய்கின்றனர் என்பதையும், அதனால் அவர்கள் அடையும்பலன்களையும் அதனால் அந்நாடுகளுக் கேற்படும் நன் மதிப்பையும் எடுத்துச் சொல்ல வேண்டும். ரேடியோ, உலகை உட்கார்ந்த இடத்தில் அறிந்து கொள்ள உயரிய சாதனம் என்பது யாவரும் அறிந்ததே. ஆகையால் கிராமத்திற்கு ஒரு ரேடியோ நிறுவ ஆவன செய்ய வேண்டும்.

விவசாய ஆபீஸ்கள் மேல் நாடுகளில் பயிர் செய்யும்முறைகளையும் அதன் நன்மைகளையும், அவர்கள் எப்படி விஞ்ஞானத்தைப் பயிர்செய்வதற்காகப்பயன் படுத்துகிறார்கள் என்பதையும், அங்குள்ள உழவர் நிலைமையையும் படம்பிடித்துக் காட்ட வேண்டும். படித்தலைவிடக் கேட்டலும் — கேட்டலைவிடப்

பார்த்தலும் எவ்வளவோ நன்மை பயக்கும். இதற்கு அதிகச் செலவாகும் எனக் கருதவேண்டியதில்லை. இதா வகைளில் படம்பிடித்துப் பணத்தை விளம்பாத்திற்குச் செலவுசெய்வதைக் கொஞ்ச நாள் நிறுத்தி அதற்காகச் செல விடும் பணத்தை இம்மாதிரி முறைகளில் செலவு செய்தால் எவ்வளவோ வரவேற்கத் தக்க நிலையிருக்கும்.

அடுத்து கிராமத்தில் இன்றி யமையாதது சுகாதாரம். சுகா தாரம் என்றால் இன்னதென்று அறியாத மக்கள் இன்னும் கிரா மத்தில் எண்ணற்றவர் இருக் கின்றனர். சுகாதாரத்தையும், மக் களின் மடமை ஒழியச் சீர் திருத்தக் கருத்துக்களையும், சிறு வைத்திய சிகிச்சைகளையும் ஆரம்ப சிகிச்சைகளையும் ரேடியோ மூலம் ஒலிபரப்பினால் மகத்தான நன்மை பயக்கும். ஊருக்கோர் மருத்துவ விடுதி ஏற்படுத்தவேண்டும். அதற்காக அரசினர் பணம் கொடுக்கத் தேவையில்லை. அந்தந்த ஊரி லுள்ள பெரும் பணக்காரர் களிடமே திட்டம்போட்டுப் பணம் தண்டல் செய்து அதற் காவன செய்யலாம். இதை யெல்லாம் செய்து முடித்தான பிறகு, நாட்டில் அமைதியோடும் குதூகலத்தோடும் ஆட்சி நடத்தக் கிராமப் பஞ்சாயத்து முறையை சிறந்த முறையில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்.

நம் நாட்டில் இராசராச சோழன் காலத்தில் அதாவது கி. பி. 985-ஆம் ஆண்டிலிருந்து கி பி. 1011 ஆண்டு இடைக் காலத்தில் அரசாண்ட தமிழ் மன்னன் கடைப்பிடித்து வந்த கிராம ஊர்ச்சபைகள் ஒவ்வொரு கிராமத்திலும் நிறுவவேண்டும். அப்படி நிறுவ மேற்படி அரசன் ஆட்சிக்காலத்தில் 16-ம் ஆண்டு நிகழ்ச்சிகள் அவர்காலக் கல் வெட்டுகள் காணக் கிடக்கிறது. அவைகளை ஆராய்ச்சிக் கண் கொண்டு பார்த்து அதன்படி மேற்படி பஞ்சாயத்து சபைகள் நிறுவ ஆவன செய்து கிராமங் களை முன்னேற்றத்திற்குக் கொண்டுவரவேண்டும். அதுவே நாம் செய்யவேண்டிய முதற் பணியாகும்!

தென்றலே



தென்றலே எவர்கண் ணிற்கும்
　　தெரிந்திடாப் பொருளே! உன்னால்
ஒன்றெனக் காக வேண்டும்;
　　உனையலால் மாற்றார் யாரும்
கன்னியைக் காண மாட்டார்;
　　உன்னையும் எவரும் காணார்.
தென்றலே! அதனாற் சென்றென்
　　செய்தியைக் கூறு வாயா?

நேற்றெனைக் கண்டாள்! கண்ணை
　　நிலத்தினிற் போட்டாள்; பின்னே
தேற்றுவாள் போலே நெற்றி
　　திருப்பினாள்; தெளிந்தேன் நானும்
கூற்றுவ வில்லை; கொல்லும்
　　குமரிதா னென்று; கண்ணால்
மாற்றமில் காத லென்றாள்
　　மாயமாய் மறைந்தா ளுன்போல்.

உளத்தினை என்பால் விட்டே
　　உடலினை மறைத்தாள் கன்னி
களத்தினில் முதுகு காட்டிக்
　　கடந்திடும் கயவர் போலே.
குளத்தினில் விடியற் காலம்
　　குளிரினிற் குளித்த வன்போல்
உளத்தோடு உடலும் ஆட
　　உயிரினைப் பிரிந்து வந்தேன்.

தூது செல்வாய்



காதலின் கலையை, இன்பக்
கவிதையின் எழிலைத், தேனில்
பாதியைச் சேர்த்து வெல்லப்
பாகுசெய் சிலையைப், பாரில்
ஊதியம் இவளே என்றிவ்
வுலகினர் எண்ணும் பொன்னை
வாதிட அழைக்க, இன்பம்
வாரிட வழியொன் றில்லை.

ஆதலால் தென்றலே நீ!
அமைதியைக் காண்பாய்; கண்டு
காதினிற் சொல்வாய் உள்ளக்
கவலையை; காதற் போரை
நீதியாய் முடித்து வைப்பாய்
நெடிதுநாள் வாழ்வாய்! இன்ப
வேதனை தீர்ப்பாய்; எந்தன்
விழியினில் ஒளியைச் சேர்ப்பாய்.

தென்றலே! தூது சென்று
செய்தியைச் சொல்வ தன்றிக்
கன்னியைத் தீண்டிக் காதற்
கனலினை எழுப்பி டாதே,
என்னையும் தன்ன லத்தன்
என்றெண்ணித் தூற்றி டாதே
நன்றிமேல் நன்றி கோடி
நல்லது தூது செல்வாய்!

பெரி. சிவனடியான்

பிழைக்கும் வழி

டி.ஆர்.வி.

“பூம்....பூம்....பூவாங்...!”— வழக்கப்படி ‘ஹார்ன்’ அலறியது. ‘பள...பள’...வென்று காலை வெய்யிலில் மின்னியவாறு நாற்பது மைல் வேகத்தில் பறந்துகொண்டிருந்த ‘ஆஸ்டின்’ காரின் வேகம் தணிந்தது.

சிறிது தூரத்தில் ஒரு சிறிய கிராமம் தெரிந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில குடிசைகள்.

சாலை நடுவில் நாலைந்து எருமை மாடுகள் அசை போட்டவாறு ஊர்ந்து கொண்டிருந்தன. காரை ஓட்டினான் டிரைவர்.

“பூம்...பூம்... பூவாங்...!”— திடீரென்று அருகிலிருந்த குடிசைக்குள்ளிருந்து ‘சட...சட’ வென்று இறக்கைகளை அடித்துக் கொண்டு சாலையை நோக்கி ஓடி வந்தது ஒரு கோழிப்பட்டாளம். பெட்டைகளும், குஞ்சுகளுமாகச் சுமார் நூறு, நூற்றைம்பது இருக்கும். தொடர்ந்து பல வாத்துக்கள் ஆடி அசைந்து கொண்டு வந்தன.

அம்புபோல் வேகமாகப் பாய்ந்து வந்த கார் ‘கிரீச்’ சென்று சப்தமிட்டுக் கொண்டு ஒரு ஆட்டம் ஆடி நின்றது. ஆனால் அதற்குள் காரின் சக்கரங்கள் கோழிக் கூட்டத்தைப் பிளந்து சென்று விட்டன.

“சனியன்கள், சாகட்டும்! நடு ரோட்டில் வந்து தொலைந்தால்....” என்று முணுமுணுத்தவாறு கீழிறங்கினான் டிரைவர்.

“ஹமீத், என்னப்பா சத்தம் அது? ஏதாவது அடிபட்டு விட்டதா காரில்...?” என்று வினவினார் காரின் சொந்தக்காரர் நாகலிங்கம் பிள்ளை. பின் சீட்டிலிருந்து இறங்கி முன்புறம் சென்றார், தன் தொந்தியைத் தடவிக்கொண்டே. அவரது சில்க் ஜிப்பா காலைக் காற்றில் படபடவென்று அடித்துக் கொண்டது.

“என்னப்பா ஹமீத்...? பார்த்து ஓட்டக் கூடாதா? ஐந்தாறு கோழி அடிபட்டுக் கிடக்குதே!” என்றார் பிள்ளை.

டிரைவர் ஹமீத் ஒன்றும் சொல்லவில்லை. அவனா பார்த்து ஓட்டவில்லை? ஒரு மைல் தூரத்திலிருந்துதான் ‘ஹார்னை’ விடாது அழுத்திக்கொண்டே வந்திருக்கிறானே?

அதற்குள் அருகிலிருந்த குடிசைக்குள்ளிருந்து ஓடி வந்தான் ஒரு குடியானவன். வயது ஐம்பதுக்கு மேலிருக்கும். வாட்ட சாட்டமான ஆள். உழைப்பினால் வயிரம் பாய்ந்திருந்தது அவன் உடல். இடுப்

யில் கச்சமாகக் கட்டியிருந்த துண்டு தண்ணீர் கண்டுஎவ்வளவு வருஷங்களாயிற்றே?

அவன் பின்னால் ஓடிவந்தான் ஒரு சிறுவன், கோவணாண்டியாக.

குடியானவன் கார் டிரைவரையும், அடிபட்டுக் கிடந்த கோழிகளையும் மாறிமாறிப் பார்த்தான்.

"என்னங்க இது...கொன்னுப்பிட்டீங்களே! பாத்து ஓட்டக்கூடாது...?" என்றான் பதட்டத்துடன். குற்றுயிராய்த் துடித்துக் கொண்டிருந்த ஒரு கோழிக் குஞ்சைக் குனிந்து எடுத்தான்.

நாகலிங்கம் பிள்ளையை நோக்கி "இதைப் பாருங்கய்யா...துடிப்பைப் பாருங்க..." என்றான் ஆத்திரம் பொங்க.

அந்தக் கோழிக் குஞ்சின் தலையைத் திருகிக் கீழே எறிந்தான். குற்றுயிராய் அது அனுபவித்த கஷ்டங்களுக்கு முற்றுப் புள்ளி வைப்பது போலிருந்தது அவன் செய்கை.

நாகலிங்கம் பிள்ளை டிரைவரைப் பார்த்தார். "உனக்குக் கொடுக்கிற சம்பளத்திற்குச் சாலையைப் பார்த்துக் காரை ஓட்டுவதற்குக் கூட யோக்கியதை இல்லையா?" என்று கேட்பது போலிருந்தது அவர் பார்வை!

ஹமீத் ஆத்திரம் பொங்கக் குடியானவனை நோக்கி "மூளை கீளை இருக்காய்யா உனக்கு...? நடுச்சாலையில்தான் கோழிகளை மேய்ப்பாங்களா? ரொம்ப தூரத்திலிருந்துதான் நான் 'ஹார்ன்' ஊதிக்கிட்டே வர்றேனே" என்றான் ரோஷத்துடன்.

"ஏண்டா முனியா! கார் ஊதின சத்தம் கேட்டுதாடா உனக்கு?" — கிழவன் அருகிலிருந்த சிறுவனைக் கேட்டான்.

"இல்லவே இல்லே, நயினா! கார் சத்தமே போடல்லே, நயினா!" என்றான் சிறுவன்.


"கோழிங்க மேலே காரை ஏத்திப்பிட்டுப் புளுகுறீங்களே, பின்னே! இன்னிக்குக் கோழி மேலே ஏத்தினீங்க; நாளைக்கு ஆளுங்க மேலேயே ஏத்திப்புடுவாங்க; மணியக்காரர் கிட்டேயும் 'ஏட்' ஐயாகிட்டேயும் சொல்லித்தான் ஆகணும்!" என்றான் விறைப்பாக.

'கிராமத்துக் கிழவன் இவ்வளவு முரடனாக இருக்கிறானே; லேசில் விடமாட்டேன் போலிருக்கே!' என்று எண்ணினார் பிள்ளை. கைக்கடியாரத்தைப் பார்த்தார். "அடடே! மணி ஒன்பதரை ஆயிடுத்தே; பத்து மணிக்குக் கோர்ட்டிலே இருக்கணுமே" என்று அங்கலாய்த்துக்கொண்டார் டிரைவரிடம்.

"மொதல்லே செத்த கோழிங்களுக்கு வழிசொல்லிப் பிட்டுப் போங்க! இதோ பாரய்யா, ஐந்து கோழிங்க செத்துப் போச்சே! இந்த அக்கிரமம் கடவுளுக்கு அடுக்குமாய்யா?"

"நடு ரோட்டிலே கோழிகளை ஏனய்யா விடறே?" என்றான் ஹமீத். அவன் மீசை துடித்தது.

"சரி...சரி... சண்டைப் போட நமக்கு நாழியில்லை, ஹமீத்! ஏய் கிழவா, இது என்ன கிராமம்?"



"கோழிப்பாக்கமுங்க..."

"திருச்சி இன்னும் எவ்வளவு தூரம் இருக்கும்?"

"இதோ கூப்பிடு தூரமுங்க—பதினைஞ்சு கல்லு இருக்குங்க!"

"இந்தாப்பா, ஹமீத்! கிழவனிடம் இந்தப் பத்து ரூபாயைக் கொடுத்து அனுப்பு, நாழியாகிறது" என்று கூறி, 'லெதர் பாக்'கைத் திறந்து, பத்துரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து நீட்டினார்.

"என்னங்க, ஐந்து கோழிங்களைக் கொன்னுப்பிட்டுப் பத்து ரூபாய் நீட்டிறீங்களே?" என்றான் கிழவன்.

"பின்பு எவ்வளவு தான் வேணும்? செத்த கோழிகளுக்கு விலையை வாங்கிக்கோ?"—இது ஹமீத்.

"கோழிப்பாக்கம் கோழிங்க ஒண்ணு பதினைஞ்சு ரூபாய், தெரியுமாங்க? பிரமாதமா பத்து ரூபாயை கொடுக்க வர்றீங்களே!" என்று வாதாடினான் கிழவன்.

"இது ஏதடா, வம்பு! கிழவன் பலே ஆளாய் இருக்கிறானே!" என்று நினைத்துக் கொண்டார் பிள்ளை. ஹமீத்தை நோக்கினார். "உன்னால்தானே இவ்வளவு கஷ்டமும். கிழவனுக்கு நீயே பதில்சொல்" என்று அவர் கண்கள் பேசின.

"ஐம்பது ரூபாய்க்குச் சல்லி குறைந்தாலும் வாங்கமாட்டேனுங்க. டேய், முனியா! நீ போய் எட் ஐயா, மணியக்கார ஐயா இரண்டு பேரையும் இட்டுக் கொண்டு வாடா!"

"ஹோய்!" என்று கத்திக் கொண்டே ஓடினான் சிறுவன்.

"கிழவன் ஐம்பது ரூபாய் கேட்கிறானே" என்றான் டிரைவர் பிள்ளையிடம்.

இதற்குள் 'சிவனே'யென்று தலையில் கையை வைத்துக் கொண்டு காருக்குள் உட்கார்ந்து விட்டார் நாகலிங்கம்பிள்ளை. திருச்சி கோர்ட்டில் பத்து மணிக்கு 'ஈரங்கி'யாச்சே! பிள்ளை வரும் வரை கோர்ட் காத்திருக்குமா?

"ஏய் கிழவா இருபது ரூபாய் வாங்கிக்கோ. செத்ததிலே இரண்டு கோழிங்க குஞ்சுகள்தானே!" என்று மன்றாடினான் ஹமீத்.

"அதையெல்லாம் ஏஞ்சாமி என்கிட்டே சொல்றே? மணியக்கார ஐயா கிட்டே சொல்லிக்கோ. அவர் நியாயம்னு நான் வாங்கிக்கிறேன்!" என்று உடும்புப் பிடியாகப் பிடித்தான் கிழவன்.

> யாழின் முழவும், இளங்குழவியின் மழலையும், குழலின் ஒலியும் உள்ளத்தை உணர்வை மகிழ்விப்பன.
>
> திரு. வி. க.

பிள்ளைவாள் பொறுமையை இழந்துவிட்டார். "டேய் ஹமீத்! என்னடா பேசும் அவனிடம்? கேட்கிறதைத் தலையைச் சுத்தி எறிந்துவிட்டு வாடா, அவன் மூஞ்சியிலே!" என்று இரைந்தார்.

பிள்ளை தோற்பையைத் திறந்து இன்னும் நான்கு பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து வீசி எறிந்தார் சாலையில்!

பருந்துபோல் பாய்ந்து சென்று நோட்டுக்களை எடுத்துத் தடவிப்பார்த்தான் கிழவன். 'வள்ளிசாக' ரூபாய் ஐம்பது! அம்மாடியோ! தன் கண்களையே நம்ப முடியவில்லை அவனுக்கு!

செத்த கோழிகளை எஜமானனுக்குத் தெரியாதவாறு மறைத்துக்கொண்டு எடுத்துவந்து முன் சீட்டின் அடியில் போடப் போனுன் ஹமீத்.

நாகலிங்கம் பிள்ளை இதைப் பார்த்துவிட்டார். "என்னடா அது...அங்கே வைக்கிறே? செத்த கோழிகளா?...சீ...சீ... அந்தக் கருமத்தைக் கிழவன் முகத்திலே வீசி எறிடா!...... உனக்கு இந்த மாதச் சம்பளம், வாயிலே மண்தான்!" என்று இரைந்தார்.

அவைகளை ஹமீத் அரைமனதுடன் வெளியில் வீசி எறிந்தான். புழுதியை வாரிக் கிளப்பிக்கொண்டு கார் கிளம்பிச் சென்று, மறைந்தது.

★

"இன்று நரி முகத்தில்தான் விழித்தேன். நேத்து ரூபாய் ஏழுதான் கிடைத்தது மூணு கோழிக்கு! இன்னிக்கு முழுசா ஐம்பது ரூபாய்!" என்று கூறிக் கிழவன் சந்தோஷப்பட்டுக் கொண்டான்.

"டேய் முனியா, வாடா இங்கே. இந்தக் கோழிங்களையெல்லாம் எடுத்துக் கூடையிலே வைடா, வித்துப்பிடலாம்! நாலஞ்சு ரூபாய் கிடைக்கும்!" என்று கூறினுன் சிறுவனிடம்.

குடிசைக்குள்ளாகவே மறைந்து கொண்டிருந்த முனியன் "ஹோய்" என்று கத்திக்கொண்டே கூடையுடன் ஓடிவந்தான். செத்த கோழிகளை எடுத்துக்கொண்டு ஓடினுன்.

அதற்குள் கிழவன் கத்தினுன். "டேய் பயலே, முனியா ஓடியாடா! இன்னெரு கார் வாதுடோய். கிட்ட வந்தவுடன் கையைக் காட்டறேன்; கோழிங்களையெல்லாம் நடு ரோட்டுக்கு விரட்டி விடு" என்றுன்.

இந்தக் காரிலும் ஒன்றிரண்டாவது அடிபடாமலா போகும்? நாகலிங்கம் பிள்ளையைப்போல் தாராள மனது படைத்தவர்களாயிருந்தால், ஏதோ ஐந்தோ, பத்தோ கொடுக்காமலா போய் விடுவார்கள்?

பொழுது போக்கு

ராதா

திரைப்படச் செய்திகள்

மின்னல் வேகத்தில் தயாராகிக்கொண்டிருக்கிறாள் ஆர். ஆர். பிக்சர்ஸாரின் வாழப்பிறந்தவள். ஆர்ட் டைரக்ஷன் பொறுப்பை ஏற்றுக்கொண்ட கங்காதரன், இரவு பகல் என்று பாராது மிக மும்முரமாகச் செட்டுக்களைப் போட்டுவருகின்றார். டி. ஆர். ராஜகுமாரியுடன் கதாநாயகனாக நடிக்க, 'சம்சாரம்' புகழ் ஸ்ரீராமன் ஒப்பந்தமாகியிருக்கின்றாராம். மற்றும் சாரங்கபாணி, பாலையா, பி. எஸ். சரோஜா, துரைசாமி முதலியவர்களும் நடித்துவருகின்றார்கள். ஒவ்வொரு காட்சியையும், மிக்க கவனத்துடன் படமாக்கி வருகின்றார் டைரக்டர் ராமசந்திரன்.

★

சிட்டாடலின் ஆத்ம சாந்தி ஓசைப்படாமல் தயாராகிக் கொண்டிருக்கிறது. தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் படம் பூர்த்தியடைய இன்னும் இரண்டொரு காட்சிகள்தான் பாக்கியிருக்கிறதாம்! தமிழ்ப் படத்திற்கேற்றவாறும், மலையாளப் படத்திற்கேற்றவாறும், உடைகளையும், காட்சியமைப்புக்களையும் மாற்றியிருக்கிறாராம் டைரக்டர் ஜோசப் தளியத். கோமளம், குமாரி, ஸ்ரீதரன்நாயர், மாதவன் நாயர், காமெடியன் ராமசாமி முதலியவர்கள் நடிக்கும் படமிது.

★

வாழ்க்கையில் வைஜயந்திமாலாவைக் கண்ட ரசிகர்கள் மீண்டும் அவர் எந்தப் படத்திலேயும் நடிக்கவில்லையே என்று தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் தவிப்பைப் போக்க விரைவிலேயே காட்சி அளிப்பார் ஏ. வி. எம். பெண்ணிலே வைஜயந்திமாலா. எம். வி. ராமன் மிகத்திறமையுடன் டைரக்ட் செய்துவரும் இப்படத்தில் இதுநாள்வரை பிரிந்திருந்த திரையுலக ஜோடி அஞ்சலியும் மகாலிங்கமும் நடித்துவருகிறார்கள் என்ற

செய்தி ரசிகர்களுக்கு வியப்பை உண்டுபண்ணக்கூடும்.

★

ஆனந்தவிகடனில் 'லக்ஷ்மி' எழுதிய 'காஞ்சனையின் கனவு' என்ற கதையைத்தான் காஞ்சனை என்ற பெயரில் படமாக்கி வருகின்றார் டைரக்டர் ஸ்ரீராமுலு நாயுடு, தமது 'பட்சிராஜா' ஸ்டுடியோவில். கே. ஆர். ராமசாமி, லலிதா, பத்மினி முதலியவர்கள் படத்தின் முக்கிய நடிகர்கள். காலஞ்சென்ற சுப்பையாப் பிள்ளைகூட அதில் அப்பா வேடத்தில் நடித்திருப்பதாகத் தெரிகிறது.

★

'கல்யாணம் பண்ணிப்பார் வீட்டைக் கட்டிப்பார்' என்றொருபழமொழி உண்டல்லவா? பழமொழியின் முதற்பகுதியை அதாவது கல்யாணம் பண்ணிப் பார் என்ற பெயரிலேயே, ஒரு படத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள் விஜயா புரொடக்ஷனஸார், வாஹினி ஸ்டுடியோவிலே. ஜி. வரலக்ஷ்மியும், என். டி. ராமராவும்தான் படதின் கதாநாயகர்கள். கதையின் பிற்பகுதியிலே ராமராவ் ஒருவைத்தியக் காரனைப்போலவும், வரலக்ஷ்மி ஒரு நர்ஸைப் போலவும் நடிக்கிறார்களாம்!

★

குடும்ப அங்கத்தினர் ஒவ்வொருவரையும் படமாக்கிவருவதென்பது இப்போது பிரபல



'கல்யாணம் பண்ணிப் பார்' என்ற படத்தில் ஜி. வரலக்ஷ்மி தோன்றும் உருக்கமான கட்டம்

மாகிவிட்டது. சம்சாரம் என்ற பெயரிலேயே படம் வந்து விட்டது. அண்ணியும், அம்மாவும்கூடத் திரைக்கு வந்து விட்டார்கள். இப்போது 'மாப்பிள்ளை' 'மருமகள்', 'என் தங்கை' போன்ற படங்கள் தயாராகிக்கொண்டிருக்கின்றன!

★

கே. ஆர். ராமசாமி என்றதும் அவர் நடிக்கும் சொர்க்க வாசல் என் கவனத்திற்கு வருகின்றது. இதில் பி. எஸ். வீரப்பா, பத்மினி முதலியவர்களும் நடித்து வருகிறார்கள். இளவரசன் ஒருவன் அடுத்த நாட்டு மன்னன் மகளை மணக்க விரும்பி, கவி ஒருவனைத் தூது அனுப்புகின்றானும் அந்த இளவரசியிடம். ஆனால் அந்த இளவரசி, தூது சென்ற கவியின் மீதே காதல் கொண்டுவிடுகின்றாளாம். இந்த முறையிலேதான் செல்லுகின்றது சொர்க்கவாசலின் கதை. கே. ஆர். ராமசாமி இளங்கவியாகத் தோன்றி மிகப் பிரமாதமாகப் பாடியிருக்கின்றாராம். அறிஞர் அண்ணாவின் அழகு வசனங்கள் படத்திற்கு மேலும் சோபையளிக்குமென்று நம்பலாமல்லவா?

★

'அமரகவி' திரையிடப்பட்ட அன்றே, பாகவதர் தமது சொந்தப்படமான "புதுவாழ்விற்கு" ஆரம்பவிழா நடத்தினாராம். லலிதாவுக்கும், பி. எஸ். சரோஜாவுக்கும் புதுவாழ்வில் பங்கு உண்டாம்.

டில்லியில் நடந்த பிலிம் விழாவில் சென்னையின் சார்பாக, சூர்யகுமாரி, வைஜயந்திமாலா, ரஞ்சன் முதலியவர்கள் சென்றிருந்தார்கள். சென்னையில் நடக்காத ஒரு அதிசயம், டில்லி பிலிம் விழாவில் நடந்தது. அதாவது சினிமா நட்சத்திரங்களெல்லாம், திறந்த மோட்டார் கார்களில் ஏறிக்கொண்டு, ரசிகர்களுக்குக் காட்சிகொடுத்துக் கொண்டே பவனி வந்தது தானும் அது.

★

கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் புயல் வேகத்திலே தயாராகிக்கொண்டிருக்கிறது. பெலிகன் பிக்சர்ஸாரது புயல் என்ற படம். இதிலே, 'செயின்ட் பிலோமினா' என்ற நாடகம் வருகிறதாம். அது மிகப்பிரமாதமாகப் படமாக்கப்பட்டிருக்கிறதாம். நாடகத்தில் எம். வி. ராஜம்மா தான் செயின்ட்பிலோமினா அவருடன் ராம்சிங் வில்லனாக நடிக்கிறார். கைதியில் வக்கீல் ராமனாக நடித்த ஜி. எம். பஷீர், எம். வி. ராஜம்மா, சகுந்தலா, மோஹன் முதலியவர்கள் நடித்து வருகிறார்களாம்.

★

அசோகா பிக்சர்ஸார், தங்களது என் தங்கையை இந்த தமிழ் வருடப் பிறப்பன்று, திரைக்குக் கொண்டுவர அரும்பாடுபட்டு வருகிறார்கள். பொன்முடி ஜோடி நரசிம்மபாரதியும், மாதுரிதேவியும் குஷியாக நடித்திருக்கிறார்களாம். எம். ஜி. சக்ர

பாணியை அடையாளமே தெரிந்துகொள்ள முடியாதவாறு மேக்அப் செய்திருக்கிறார்கள், எம்.ஜி. ராமச்சந்திரன், புதுமுகம் இ. வி. சரோஜா முதலியவர்களின் உருக்கமான நடிப்பு நம் உள்ளத்தை உருக்கிவிடுமாம். புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் இரண்டு பாடல்கள் படத்தில் ஒலிக்குமாம்.

★

டைரக்டர் பத்மநாபன் மிகப் பிரமாதமான முறையில் தனது குமாரியைத் தயாரித்திருக்கிறாராம் பணச்செலவையும் பாராமல்! மாதுரிதேவி கிழஅரசனை (செருகளத்தூர் சாமா) மயக்கவும் இளவரசியாக வருகிறாராம். ஸ்ரீரஞ்சனி, எம். ஜி ராமச்சந்திரன், துரைராஜ், சாயிராம் முதலியவர்களும் நடித்திருக்கிறார்கள். எம்.ஜி. ராமச்சந்திரன் நடிக்கிறார் என்றால், கத்திச் சண்டைகளுக்கும், குதிரைச்சவாரிகளுக்கும் குறைவிருக்காதல்லவா?

★

சென்ற மாதம் இந்தியாவில் நடந்ததே அகில உலக பிலிம் விழா, அதைப்போலவே இன்னும் சில மாதங்களில் பெர்லின், வெனிஸ் போன்ற நகரங்களில் பிலிம் விழா நடக்கவிருக்கிறது. அவ்விழாவில் கலந்துகொள்ள இந்தியாவுக்கும் அழைப்பு வந்திருக்கிறதாம்! தென்னிந்தியாவின் சார்பில் 'பாதாள பைரவி' படத்தையே அனுப்பிவைப்பார்களானால் நாம் சிறிதும் ஆச்சரியப்படமாட்டோம்.

உங்களுக்கு
நான்கு நண்பர்கள் இல்லையா?

'பொன்னி' உங்களுக்கு இலவசமாக வர இதோ அரிய சந்தர்ப்பம்!

1. பெயர் ______________________________
   விலாசம் ______________________________
2. பெயர் ______________________________
   விலாசம் ______________________________
3. பெயர் ______________________________
   விலாசம் ______________________________
4. பெயர் ______________________________
   விலாசம் ______________________________
5. பெயர் ______________________________
   விலாசம் ______________________________

மேற்குறிப்பிட்ட முதல் நான்கு விலாசங்களுக்கு 'பொன்னி' ஒரு ஆண்டுக்கு/ஆறு மாதத்திற்கு அனுப்பி வைப்பதற்காகச் சந்தாத் தொகை ரூ. 24 அல்லது 12 இன்று M. O. செய்திருக்கிறேன். 5-வது இடத்தில் குறிப்பிட்டுள்ள என் விலாசத்திற்கும் ஒரு ஆண்டுக்கு/ஆறுமாதத்திற்கு இலவசமாகப் 'பொன்னி' அனுப்பவேண்டுகிறேன்.

ஊர்.....................

தேதி.....................

சந்தா

ஆறு மாதம் ரூ. 3—0—0
ஒரு ஆண்டு ரூ. 6—0—0

____

கையெழுத்து

....

இந்தப் பாரத்தைப் பூர்த்திசெய்து இன்றே அனுப்புங்கள்; இச் சலுகை தீருவதற்குள் உங்கள் பெயர்களைப் 'பொன்னி' சந்தாப் பதிவில் இடம்பெறச் செய்யுங்கள்.



மனோரஞ்சிதம்

-தங்கமணி-

4. அன்பில் மயங்கிய ஆனந்தச் சிரிப்பு!

“...சாபமிட்டான்!” என்று சொல்லவில்லை! அப்படித்தான் நான் அறிவுகெட்டுச் சொல்லி வைத்தாலும் அப்பாவுக்கு அறிவு போதிக்கும் அளவுக்கு அறிவாற்றல் படைத்த இந்தக் காலத்துத் தம்பி, தங்கைகள் நம்பமாட்டார்கள் என்பதும் உள்ளங்கைப் புண்தான்! அப்படித்தான் ஒரு வேளை அந்த ரோகிக் கிழவன் ஆத்திரத்தால் அறிவு கெட்டுச் சபித்தாலும், வானமளாவிய அந்தப் பங்களா சரிந்து விழாது! சரிந்து விழுந்தது என்று நம்பிவிட நாமெல்லாம் பழங்காலத்துத் தம்பி, தங்கைகளல்லவே!’ ‘கண்ணகியின் சாபத்தால் மதுரைமாநகரம் சாம்பலாகியது’ என்று சொல்லி ஏமாற்றிய ‘ஆகாலமு மலையேறிப் போயினடே!’...

ரோகிக்கிழவன் பங்களாவைப் பார்த்தான். ‘டியூப் லைட்’டுகளின் வெண்ணில வெளிச்சத்தைக் கக்கும் சன்னல்களைப் பார்த்தான்...பார்த்தான்...பார்த்தான் ...... பார்த்துக்கொண்டே பதுமையால் நின்றவன் திடீரென்று சிரிக்க ஆரம்பித்துவிட்டான்! தன் உடம்பு வலிகளை மறந்து சிரித்தான்! பாசி படர்ந்த பல்லெல்லாம் தெரியச் சிரித்தான்! பழங் காலத்துப் புராணக்குப்பைகளைக் கண்டு கெக்கலித்து இன்றைய அறிவுலகம் சிரிப்பதைப் போலச் சிரித்தான்! “மனோரஞ்சிதம்! ஆகா அழகான பெயர்! அற்புதமான பெயர்!” என்று சொல்லிச் சொல்லிச் சிரித்தான்! சிரித்தான், சிரித்தான் ... சிரித்துக் கொண்டே மேற்குத் திசையை நோக்கித் தள்ளாடித் தள்ளாடி நடந்தான்! நடந்து கொண்டே குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான்! சிரித்துக்கொண்டே போனான்!

ஆமாம், அந்தக் கிழவன் யார்? அவனுடைய ஆக்கத்தனமான

ஆனந்தச் சிரிப்புக்கு அர்த்தம்? அதெல்லாம் அப்புறம்!

நாட்கள் நடக்க ஆரம்பித்தன.

மனோஞ்சிதத்தால் அந்த ரோகிக் கிழவனை மறக்க இயலவில்லை! அவளுக்கு அந்தக்கோரக் கிழவனின் மீது நெஞ்சங்கொள்ளாத நேசம் பிறந்துவிட்டது! அந்தக் கிழவனை—பயங்கர ரோகியை—விகார மனிதனை—பார்க்கவும், பார்த்துப் பேசவும், பேசிச் சிரிக்கவும், சிரித்து விளையாடவும் மனோஞ்சிதத்திற்கு ஆசையும் ஆவலுமாயிருந்தது. அவளுக்கு விளையாட்டுக் கசந்தது. பள்ளிக்கூடம், உணவு கசந்தது. தண்டு முறிந்து தடாகத்தில் மிதக்கும் தாமரையைப் போல, மனோஞ்சிதம் மகிழ்ச்சியற்று மனஏக்கம் கொண்டு வதங்கினாள். அவளுடைய எண்ணமெல்லாம் அந்த ரோகிக் கிழவனின் மீதே வளைய வளைய வட்டமிட்டுக்கொண்டிருந்தது. ஒரே ஆசை! ஒரே அவா!

பாவம்! கவலையே உருவான அந்தக் கற்கண்டுத்தங்கை மனோரஞ்சிதம் தினந்தினமும் தோட்டத்திற்கு வருவாள்; அன்று விளையாடிக்கொண்டிருந்த அதே இடத்திற்கு வருவாள்; உட்காருவாள்; அன்புக் கிழவனின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு ஏக்கத்துடன் இருப்பாள். கிழவன் வரமாட்டான்! அவன் எங்கு போனானோ?...பாவம்! மனோரஞ்சிதத்தின் உள்ளம் கூம்பும்; உடல் சாம்பும்! அவள் அழுவாள் தேம்பித் தேம்பி அழுவாள்! எனினும், 'அந்த ஆசைக் கிழவன் மறுபடியும் என்றைக்காவது ஒரு நாள் நிச்சயம் என்னைச் சந்தித்தே தீருவான். என்னிடம் ஆனந்தமாய்ப் பேசுவான். அன்பாக விளையாடுவான்' என்ற நம்பிக்கை மட்டும் அவள் பிஞ்சு உள்ளத்தில் உறுதியாக மலர்ந்திருந்தது!

இப்படியே பல நாட்கள் புதைந்தபின் பௌர்ணமி பிறந்த இரண்டாம் நாள். முன்னிரவு. எங்கும் நல்ல நிலா காய்ந்து கொண்டிருந்தது. தோட்டத்துப் பக்கமாயுள்ள அறையில், தன் அருமை அம்மாவின் அன்பு அணைப்பில் புதைந்து உறங்கிக் கொண்டிருந்தாள் மனோஞ்சிதம்.

அறையில் நிச்சலனமான அமைதி சூழ்ந்து கிடந்தது.

மனோஞ்சிதம் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். அவளுடைய அழகு முகம் கவலையால் கருகிக் கிடந்தது. வாட்டமுற்று வாடி வதங்கிக் கிடந்தது. பூமொட்டுப் போல் கூம்பிக் கிடந்த அவளின் பூவிழிகளிலிருந்து முத்து முத்தாகக் கண்ணீர்த் துளிகள் அரும்பி வழிந்து கொண்டிருந்தன.

அய்யோ! ஆழ்ந்த உறக்கத்தில் கூட அழுகையா? ஆமாம், கனவிலும், நினைவிலும் அன்று வந்து அன்பாகச் சிரித்துப் பேசிய ரோகிக் கிழவனை நினைத்து நினைத்து நெஞ்சம் உருகிக்

கொண்டுதானிருந்தாள் மனோரஞ்சிதம்.

பாவம்! தக்கச் சூரியனின் வெயிலால், பாலைவனமாகிவிட்ட மனோஞ்சிதத்தின் இளம் இதய நிலத்தைக் குளிர்பண்ண, அந்தக் கிழவன் என்ற மழை வருமா, வாராதா?......

கண்மணி மனோஞ்சிதம் தூங்கியபடியே அழுது கொண்டிருந்தாள். நேரம் அமைதியாய்க் கரைந்துகொண்டே இருந்தது.

மணி பதினொன்று. எங்கும் அமைதி. எங்கும் நிலவொளி.

"மனோஞ்சிதம்!".....அமைதி கவ்விய இந்தச் சமயத்தில் ஓர் அன்புக் குரல் மிகமிக மெல்லியதாக எழும்பியது. இந்தமெல்லிய குரலைக்கேட்ட மனோஞ்சிதம் திடுக்கிட்டாள். விழித்தெழுந்து உட்கார்ந்துகொண்டு சன்னல் வழியே வெளியே பார்த்தாள்.

வெளியே — அதாவது தோட்டத்தில் பூங்காற்று உலாவிக் கொண்டிருந்தது. பொன்னிலவு பளபளத்துக் கொண்டிருந்தது. அமைதி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தது. தோட்டத்தின் நடுவிலுள்ள நீர்த்தொட்டியின் அருகில் நின்றுகொண்டிருப்பவன் ஆம்; அவனே! அவனே! அவனே!— யார்?

ஆமாம், அந்த ரோகிக் கிழவன்தான்! அந்தப் பயங்கரக் கிழவன்தான்! மனோஞ்சிதத்தின் மாசற்ற இதயத்தைப் பாசத்



தால்—அன்பினால் கவர்ந்த அதே அன்புக் கிழவன்தான்! அவன் தன் நெஞ்சைக் கவர்ந்த மனோரஞ்சிதத்தையே வெறித்து நோக்கியபடி கைகளிரண்டையும் ஏந்தியபடி அசைவற்று நின்று கொண்டிருந்தான். அவனுடைய குரூரமான முகத்தில் ஏசுவின் களை திகழ்ந்தது!

"தாத்தா...ஆ...!..."—மனோரஞ்சிதம் தன்னை மறந்து கூவினாள். கூவிய மறுகணமே, சற்று அச்சமடைந்து "அம்மா, விழித்துக் கொண்டாளோ?" என்று சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

அம்மா அசையாமல் தூங்கிக் கொண்டிருந்தாள்.

மனோரஞ்சிதம் பயம் நீங்கி பெருமூச்செறிந்தாள். கட்டிலை விட்டு மெதுவாகக் கீழே இறங்கினாள். தோட்டத்தை நோக்கித் தோட்டத்தில் நிற்கும் கிழவனை நோக்கிச் சிட்டாய்ப் பறந்தாள்!

ஒரு கணத்திற்குப் பின்—

"தாத்தா!..."

"கண்மணி!" உயிர் மயங்கக் கூவிய ரோகிக் கிழவன் மனோரஞ்சிதத்தை நோக்கிப் போவவுடன் கையேந்தினான். பஞ்சாய்ப் பாய்ந்தோடி வந்த மனோரஞ்சிதம் கிழவனின் ஏந்திய கைகளுக்குள்ளோடி 'டபக்' கென்று புதைந்தாள்!

ஆகா! என்ன பேரானந்தம்! என்ன மகிழ்ச்சி! இருவரும் ஈருயிரும் ஒருடலுமானார்கள்! சிறிது நேரத்துப் பேரின்ப மயமான மௌனத்திற்குப் பின்—

"தாத்தா, இத்தனை நாளாக ஏன் வரவில்லை? எங்கே போயிருந்தீர்கள்?"—மனோரஞ்சிதம் ஆனந்தக்கண்ணீர் வடித்துக் கொஞ்சினாள், கிழவனின் அழகிய முகத்தைப்பார்த்துக்கொண்டே. என்ன, அழகிய முகமா? ஆமாம், அழகிய முகந்தான்! அன்புச் சுடர் பிரகாசிக்கும் மனோரஞ்சிதத்தின் தமிழ்க் கண்களுக்கு அந்தக் கோரக் கிழவனின் குரூர உருவம் அழகாக—ஏன், பேரழகாகத் தோன்றுவதில் என்ன அதிசயமிருக்கிறது?

"என் தமிழ்க் கனியே, பார்க்கச் சகியாத என் உடலின் பயங்கர விகாரத்தைக் கவனியாமல், பேரன்புடன் 'தாத்தா' என்றழைக்கும் என் தெய்வமே!" எனத் தன் மனதிற்குள் எண்ணி மகிழ்ந்த கிழவன், மனோரஞ்சிதத்தை நெஞ்சோடு இறுக அணைத்துக் குதூகலித்துச் சிரித்தான். கிழவனின் சிரிப்பைக் கண்ட மனோரஞ்சிதம் சிந்தை குளிர்ந்து ஆனந்தமாய்க் குலுங்கிச் சிரித்தாள்! இத்தனை நாளும் அந்த அன்புக் கிழவனின் ஆனந்தச் சிரிப்பைக் காணத்தானே அவள் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தாள்?...

இருவரும் மாசுமருவற்ற அன்பில் மயங்கிச் சிரித்துக் கொண்டிருக்கும்போது திடீரென்று—என்ன நடந்தது? அய்யய்யோ!...எத்தனை பயங்கரமான சம்பவம்!

கோழிக்குணம்

சுலோசனா


மூடியிருந்த ஜன்னலைத் திறந்தேன். குளிர்ச்சியான காற்று முகத்தை உரசி இன்புறுத்தியது. மலர்ந்து நின்ற மலர்களிலின்று வரும சுகந்த வாசத்தை முகர்ந்தவண்ணம் நின்ற எனது கண்கள், என் அழகிய சிறு வெள்ளைக் கோழிமீதுவிழுந்தன. மூன்று தினங்களுக்கு முன்னர் தான் சந்தையிலிருந்து வாங்கி வந்தேன் அதை. குஞ்சுக்கோழி தான். தூய வெள்ளை நிறத்தோடு மிகவும் அழகாகவிருந்த அந்தக் கோழி என் மனதைக் கவர்ந்துவிட்டது!

தனது கால்களினால் புல்தரையைக் கிளறிக்கொண்டிருந்தது அது. ஜன்னல் கம்பிகளில்முகத்தைப் புதைத்தவாறே கவனிக்கலானேன் நான். ஏதாவது ஆகாரம் அகப்படாதா என்ற ஆவலினால் கோழி வெகு விரைவாகத் தரையைக் கிளறிக்கொண்டிருந்தது. சிறிது நேரத்திற்குப் பின்னர் ஏதோ ஒரு புழு அகப்பட்டதுபோலும், கோழிக்குத்தான் எத்தனை உற்சாகம்! ஆவலோடு அதைத் தனது அழகிய அலகினால் கொத்தியதுதான் தாமதம்—'க்ளக்' என்ற ஒரு சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு நின்றது...

நான் வெகு உற்சாகத்தோடு நோக்கினேன்.

• • •

எனது பழையகறுப்புக் கோழி ஒரு செடியின் பின்புறமிருந்து 'திடும்' என்று அங்கே தோன்றியது! முன்பின் யோசியாமல்





‘சரே’லென்று குஞ்சுக்கோழிமீது பாய்ந்து, அது பிரயாசையோடு கண்டுபிடித்தெடுத்த ஆகாரத்தைப் பறித்துக்கொண்டுவிட்டது! பறித்ததுமாத்திரமா? அதை விழுங்கியும்விட்டது! என் அழகிய வெள்ளைக் கோழியின் துயரத் தோற்றம் என் மனதை அப்படியே உருக்கிவிட்டது. கறுப்புப் பெட்டையை ஒரே அறையில்கொன்றுவிடலாம்போல் தோன்றியது. எனினும், முட்டையிடும் கோழியல்லவா? பொறுத்துக்கொண்டு மேலும் கவனித்தேன்...

ஏமாந்து நின்ற சிறு கோழி சற்று அப்பாற் தள்ளி, வேறோர் இடத்திற்குச் சென்று கிளற ஆரம்பித்தது. ஏதோ கண்டுகொண்டது போலும்; அவசரமாகக் கொத்தியது...அவ்வளவுதான்! மறு நொடி பெட்டைக் கோழி அதனருகில்! வெள்ளைக் கோழியின் தலையில் ஒரு கொத்து! அலறிக்கொண்டே ஓடியது என் அழகுக் கோழி. பாவம், அதன் பசி அதற்கல்லவா தெரியும்? நடந்ததையெல்லாம் மறந்து மீண்டும் இரை தேட ஆரம்பித்தது. பெட்டைக்கோழி விட்டுவிடுமா என்ன? எங்கெங்கெல்லாம் சென்று அது இரை தேட ஆரம்பித்ததோ, அங்கெல்லாம் பொல்லாத கறுப்புக்கோழியும் பின்தொடர்ந்தது! அது கண்டுபிடிக்கும் உணவு இதற்கு! அதனுடைய பிரயாசையின் பயனை இது அனுபவித்தது! என்ன, இதற்கு வேறு இடமே கிடைக்கவில்லையா? என் தோட்டத்தில் இடமா இல்லை? இருக்கிறது! பின்—?

வலியவர் எளியவர்களை ஆளுகின்ற விதம் அது!

வளரும் இலக்கியம்

நாம் வாழ...

வெள்ளியாலான விளக்கில் இலவ பஞ்சுத் திரியிட்டு அசல் விளக்கெண்ணெய் ஊற்றிக் கொளுத்தி விட்டாலுங்கூடக் கொஞ்சநேரத்திற்குள், அவ்விளக்குத் திரி சிட்டங்கட்டி இறுகி, ஒளி மங்கிக் கருகித்தான் போகும்; ஏனெனில், திரியில் சிட்டங்கட்டும்போதெல்லாம் அதை அவ்வப்போது தூண்டிக் கசக்கி ஏற்றிவிட, அவ் விளக்குக்கென ஒரு தூண்டுகோல் இல்லாததனால்!

விறிட்டு எரிந்து விரைவில் அணைந்து புகையாமலும், அல்லது, ஒளி மங்கிக் கருகிக் குறைவாமலும், நிதானமாக எரிந்து, தெள்ளத் தெளிவாய்ப் பிரகாசிக்க மனித விளக்குகளுக்கு நிரம்பவும் அத்தியாவசியமான ஒரு நல்ல தூண்டுகோலாகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது, 'நல்வாழ்வுக் கட்டுரைகள்' எனும் இவ் அரியநூல். இந் நூல், 'மனிதன் வாழத்தான் பிறந்தான். வாழையைப்போல் பலன் ஈந்தும், வாழாமல் சாவதற்காக அல்ல; அவன் வாழத்தான் வேண்டும், எனின் அவன் தன் ஒவ்வொரு பருவத்து வாழ்வையும் அவன் எப்படி எப்படியாகச் செப்பனிட்டுக்கொள்ள வேண்டும்?...' என்ற நல் வாழ்வுக்கான நல் வழி வகைகளை எல்லாம் அக்கு வேறு, ஆணி வேறாய்ப் பிரித்துப் பிரித்து, இளந்தமிழில் இனிக்க இனிக்க, துலங்கத் துலங்க, நல்வாழ்வுப் பிரசாரஞ்செய்கிறது.

ஆங்கிலப் பேராசிரியர் திரு. உவில்லியம்காபட் அவர்களின் 'இளைஞருக்கான அறிவுரைகள்' என்ற ஆங்கிலநூலைத் தழுவி, அறிஞர் அப்பாத்துரைப்பிள்ளை அவர்களால் எழுதப்பெற்று, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் அளிக்கப்பெற்றிருக்கும் இந்நூல், நம் வாழ்க்கைக்கு அரியதொரு துணையாகும். மடமை இருளறக்கும் தமிழ்க்கடலில் வாழ்க்கைத் தோணியில் உலாவிய—உலாவுகின்ற—உலவப் போகின்ற—எல்லார்க்கும் இந் நூல் ஒரு கலங்கரை விளக்கு!

நல்வாழ்வுக் கட்டுரைகள் : தழுவல் : அறிஞர் அப்பாத்துரைப் பிள்ளை அவர்கள். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு, சென்னை. விலை ரூ. 1-12-0.

'எதிரி எப்படிப்பட்டவன்? எத்தகைய பராக்கிரமம் வாய்த்தவன்?... அவன் எப்படி எப்படியெல்லாந் தாக்குவான்?'...என்று எதிரியைப் பற்றிய ரகசியங்களைத் தெரிந்துகொண்டவனுக்கு வெற்றி கிட்டுவது மிகச் சுலபம்!

நம் வாழ்விலும் எத்தனை எத்தனையோ எதிரிகள் குறுக்

கும் கெடுக்குமாக உலாவுகின்றனர். ஆசிரியர் 'கோவைக்கிழார்' அவர்கள், 'காட்டு எருமைகள்' என்ற இந்நூலில், நல்லார் பொல்லார் ஒரு சிலரை, காட்டு எருமைகளின் சார்பாக நமக்குக் காட்டித்தந்து, நாம் வாழத்துணை புரிகிறார். இச்சரிதச் சரத்தில் பதினெட்டாம் பூவான 'காமம் என்ன செய்யாது?' என்ற சிறு சரிதம், மீட்டும்மீட்டும் படிக்கத் தூண்டும் மணம் பெற்றுள்ளது. நாம் வாழ, வாழ்க்கையின் பல கோணங்களைத் தெரிந்து கொள்ளத் துணைகோலும் இந்நூல், இந்நூலுக்கான முயற்சி எல்லாம் போற்றத்தக்கவை

காட்டு எருமைகள்: ஆசிரியர்: 'கோவைக்கிழார்', கோவை நிலையப் பதிப்பகம், கோயமுத்தூர். விலை ரூ. 1–4–0.

அவன் பகலவனைப் போன்று பொதுவுடமைவாதி. இப்படியாக ஒன்றை உவமை காட்டிப் பிறதொன்றை உயர்த்திச் சொல்வதே ஒரு தனித் திறுசுக் கலையழகு!

அப்படித்தான், 'அறிவுலக மேதை பெர்னார்டுஷா' என்ற இவ்வாழ்க்கைச் சரிதமும். மேதை பெர்னாடுஷாவின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவதோடு, இங்கிலாந்து, அயர்லாந்து, பிரிட்டன் ஆகிய தீவுகளின் அரிய வரலாறுகளையும் தெளிவுபடக் கூறியுள்ளார். இந்நூலாசிரியர் ஷாவைக் காட்டி அம்மூன்று தீவுகளையும், அம்மூன்று தீவுகளைக் காட்டி ஷாவையும், மாற்றி மாற்றிச் சொல்லிப்போகும் அச்சுவையொழுகும் பாணியே, மேலும் மேலும் படித்துணரத் தூண்டுகிறது. அதுவுமன்றி வாழ்ந்து அநுபவித்த ஷாவின் வாழ்க்கை வரலாற்றை ஒளிர ஒளிரக் காட்டி நாம் வாழ, நம்மையுந் தூண்டும் அவ் அரிய நோக்கம் எல்லோராலும் போற்றுதற்குரியது. வாழ்க்கையை எதிர்த்துப் போராடி வெற்றிகண்ட ஒருவரின் நல்வாழ்வைச் சொல்லி நாம் வாழ அளித்திருக்கும் இந்நூல், எல்லோரும் படித்துணரத்தக்க ஒப்பற்ற நூல் எனின் அது மிகையாகாது.

அறிவுலக மேதை பெர்னார்டுஷா. ஆசிரியர்: அறிஞர் அப்பாத்துரைப் பிள்ளை. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு, சென்னை. விலை ரூ. 2–8–0.

–குமணன்

புதிய சீனாவிலே

இருளடைந்த நிலைமையைக் கடந்து சீனா ஒரு புதிய விளக்கத்தைக் கண்டிருக்கிறது. அமெரிக்க முதலாளித்துவத்தின் கைப் பொம்மையான சியாங்கே ஷேக்– அவருக்குக் கீழ் இருந்த சீன நாட்டின் பரிதாபமான நிலைமை— ஆகியவற்றை முதலில் விளக்கி விட்டுப் புதியசீனாவின் போராட்டம், நோக்கம், அதன் வெற்றிகள் முதலியவற்றை ஆசிரியர் விளக்கிச் சொல்லும்போது கம்யூனிஸ்ட் சீனாவின் வெற்றியை நாம் மனமார ஏற்றுக் கொள்ளுகிறோம்.

மக்கள் சேனை பொதுமக்களோடு பழகவேண்டிய முறைகளையும், நீர்ப்பாசன வசதிகளுக்காக மக்கள் சேனை உழைத்ததையும் படிக்கும்போது பெருமிதத்தோடு பாராட்ட வேண்டியவர்களாகிறோம்.

ஆசிரியரின் நடை, கருத்து அமைப்பு முதலியவற்றிலே ஏற்படும் கவர்ச்சியைக் காட்டிலும் இந் நூலுக்கே அமைந்த 'விஷயக் கவர்ச்சி' தான் அதிகம்.

இந்த நூலைப் படித்தவுடன் 'ஏன் நம் நாடும் சீனாவாக மாறக்கூடாது?' என்று ஆசிரியர் நினைத்திருப்பாரானால் அவர் வெற்றியடைந்திருக்கிறார் என்றே சொல்லலாம். இது போன்ற நூல்கள் கம்யூனிஸ்ட் அனுதாபிகளையோ, கம்யூனிஸ்டுகளையோ உண்டாக்கவல்லன.

இதை ஒருவரலாற்று நூலாகக் கணக்கிட்டால், ஆசிரியரின் நேர்மை உணர்ச்சி குறைவுபடுகிறது. தொடக்கத்திலிருந்து இறுதிவரை ஆசிரியரின் குரலில் உரமேறிய கம்யூனிஸ்ட் 'சிங்கநாதம்' எழுந்துநின்று முழக்கமிடுகிறது. உணர்ச்சியைச் சிறிது உள்ளடக்கி விஷயஞானமே பிரதானமாகக் கொண்டு எழுதியிருக்கலாம்.

புதிய சீனாவிலே: ஆசிரியர்: எஸ். ராமகிருஷ்ணன். சக்தி வெளியீடு, சென்னை. விலை ரு 1—12—0.

—மு. அண்ணாமலை

கவிதைச் சுவை

நாவல், கதை என்று புத்தகம் புத்தகமாகப் புற்றீசல் போல வெளிவரும் இந்த நாளில் 'என்றோ ஒருநாள்' தான் கவிதை நூல்—அதுவும் ஒன்றோ, இரண்டோ வருகிறதென்றால் ஆச்சரியப்படாமலிருக்க முடிகிறதா?

'அறிஞர் அப்பாத்துரையார் வாயிலாக இதுபோன்ற நூல்கள் பல வெளிவரல் வேண்டும் என்பது எனது வேட்கை. இந்நூலை நன்முறையில் தந்த அவருக்கு எனது வாழ்த்து உரியதாக' என்று தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களின் சிறப்புரையுடன் ஆரம்பமாகிறது 'நிழலும் ஒளியும்' என்ற கவிதை நூல். பன்மொழிப்புலவர் தம் புலமைக்கு மற்றொரு சாட்சி இது. மண்ணுலகில் நிழல்—ஒளி இவ்விரண்டும் உள்ளடக்கும் வெவ்வேறு தன்மைகளை ஆராயும் அழகிய காவியம்.

நிழலும் ஒளியும்: ஆசிரியர்: அறிஞர் கா. அப்பாத்துரை. ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை. விலை 0-8-0.

வாழ்க்கையின் நடைமுறைச் சித்திரங்களை வைத்துப் புனையப் பட்டிருக்கும் 'காலமுள்' முதலிய துண்டுக் கவிதைகள், ஆசிரியை தேவகியின் நல்ல எதிர்காலத்திற்கு ஓர் அடையாளமாக அமைகிறது என்ற அளவில்

தான் கூறமுடிகிறது. சொற்கள் பல இடங்களில் வழிதவறிவிழிக்கின்றன. சில தவறுகளைக் களைந்தால் 'காலமுள்' சுவை தரலாம். கவிதை அமைக்கத் தேர்ந்தெடுக்கும் குறிக்கோள்களிலே இன்னும் அதிக கவனமும், வேண்டும் புதுமையும் அமைக்க முயனருல் வெற்றிபெற வழி உண்டு.

—காலமுள் : ஆசிரியை : தேவகி. குமார் பதிப்பகம், பூந்தமல்லி. விலை 0-8-0.

சுவாமி அடைக்கலம் 'சாணு' என்ற புனைப்பெயரில் தொகுத்திருக்கிருர் 'உள்ளைக் கொள்ளை'யைக் கவிதை வடிவிலே. எண்ணங்கள் சிரிக்கின்றன, அவர் இதயம் பேசுகிற காரணத்தால். தலைப்புக் கவிதையுடன், 'மறுவாவு என்றோ?' 'மதி விடு தூது' முதலியனவும் கருத்தாழம் பெற்றிருக்கின்றன. எஞ்சுபவையும் அந்நிலை அடைய அவற்றில் புரட்சி, அல்லது புதுமை ஏதாகிலும் வேண்டாமா?

உள்ளக்கொள்ளை: ஆக்கம்: சாணு. நல்லாயன் பண்ணை, சென்னை-1. விலை 0-12-0.

—பூவை

கதம்பம்...!

இல்லாத சப்பைக் கட்டுக்கள் சகிதமாகப்பெரிய பெரிய சொரிசுமைகளையும் போதாதற்குத் தாங்கிக்கொண்டு, புத்தகச் சந்தையில் வெறும் காகிதப் பூக்களாகக் காட்சிதரும் எத்தனையோ உப்புசப்பற்ற புத்தகங்களைப் பார்த்திருக்கிறோமல்லவா? அந்த நம் ஏக்கத்தை இன்பமாக மாற்றவல்ல ஒரு சில கடல்முத்துக்களும் சுடரொளி செய்யும் நோக்கில் நம் இலக்கிய இன்பத்திற்குக் குறைவேதும் இருக்கக் காரணமில்லை தானே...?

அழகிய முகப்புச் சித்திரம் வரவேற்புப் படிக்க ஏடுகள் புரண்டோடும் 'ஆசைவெள்ளம்' நண்பர் சுகியின் அழகிய நாவல்.

வாழ்ந்து கெட்ட சாம்பசிவம்—வாழ்வை வெற்றியுடன் சமாளித்த அவர் மகள் ரோகிணி—இருவர் தம் வாழ்க்கைத்தளத்திலே ஆக்கப்பட்டிருக்கும் இச்சிறு நாவலில் ரோகிணி—சந்திரன் காதல் கதை, அதன் பலனுக அவள் தன் தந்தையையும் எதிர்த்துப் பிரிவது, ஜமீன்தார் சாம்பசிவம் விரக்தியடைந்து துறவியாக மாறுவது ஆகிய கட்டங்கள் சுவையுடன் ஓடுகின்றன.

தன் 'ஆல்ரவுண்ட்' திறமையை இந்தப் புத்தகத்தில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு காட்டியிருக்கிருர் ஆசிரியர்.

காதல் ஆசிரியர் பதிப்புரையில் கூறுவதுபோல 'ஆசைவெள்ளம்' உணர்ச்சி வெள்ளமாகப் பாய்வதுடன் சிந்தனையையும் தூண்டிவிடுகிறது.

ஆசைவெள்ளம்: ஆசிரியர்: சுகி. காதல் வெளியீடு, திருச்சி. விலை 0-12-0.

தமிழர் பண்பாட்டுக்கு ஒவ்வாது அலங்கோலமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும் பெண்ணை

அட்டையாக்கி ஓடி வந்திருக்கும் 'தேடி வந்தவளை'ப் படைத்த பெருமை தோழர் ஜெகசிற்பியனைச் சாருகிறதென்ருல் அதில் வியப்போ, விபரீத உணர்வோ தலைகாட்டவே காட்டாது. பாசவெறி, தங்க ரோஜா, தேடிவந்தவள் ஆகிய சிறுகதைகளின் கூட்டு இது. கோர்ட் காட்சிகள் சம்பந்தப்பட்டு முதலிரு கதைகளும் இருப்பதை வாசகர்கள் அவ்வளவு விரும்பமாட்டார்கள். விருந்து என்ருல் 'ஐட்டங்'கள் மாறி இருந்தால்தானே சுவைக்கும்?

மொத்தத்தில் கதைகள் மூன்றும் படிப்பதற்குச் சுவாரஸ்யமாக விருக்கின்றன.

தேடிவந்தவள்: தீட்டியது: ஜெகசிற்பியன். வைகறை வெளியீடு, திருப்பாதிரிப்புலியூர். விலை 0-8-0.

புரட்சி ஒலம் கேட்கும் நாளிலே இன்னும் 'ஆவி' வடிவத்தில் கதைகளை வடித்து இந்தத் தலைவேதனையை வாசக நேயர்கள் தலையிலும் கட்டிக் கொள்ளும் 'புண்ணியம்' இந்த எழுத்தாளர்களுக்கு என்றுதான் மாறுமோ?

விசித்திர முடிவுக்கு உடந்தையான மருதையின் கதைதான் தணலன் ஆக்கிய 'மருதையின் ஆவி' கதைச் சுருக்கம்.

மருதையின் ஆவி: ஆசிரியர்: ரா. தணலன். தென்றல் நிலையம், சென்னை-1 விலை 0-4-0. —பாலா.

Edited, Printed and Published by Murugu Subramanian for Ponni Ltd., at Ponni Achakam, 16, Sevi Amman Koil Street, Tondiarpet, Madras-21.



'அடுக்களையில் அணங்கு - யார்மீது கருத்தோ ?'

— ஜூபிடர் ராணியில் பானுமதி

" என்னை
அடையாளம்
தெரிகிறதா ?"

— என் தங்கையில்
எம் ஜி. சக்ரபாணி

